# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 35-ம் இலக்கம்


# வியாகுலத்தாய்

— சுவாமி மரியருள் தம்புராஜ், மதுரை —



மரித்தமைந்தனை மடியில்தாங்கி, பொங்கிஎழும் பெருந்துயரில் மூழ்கி, உலகையேமறந்து, உத்தம மகனின் பாடுகளைத் தாங்கவொணுது துடித்தழும் அன்புத்தாய்! இந்தச் சோகக்காட்சியைக்கண்டு உருகாதவர்யார்? கண்களைக்குளமாக்கி, இதயத்தைப்பிழிந்து சோகபிம்பமாய்க் காட்சிதரும் அன்னையை வியாகுலத்தாய்என அழைக்கிறோம். மீட்பரான தமதுதிருமகனைப் பெற்றெடுத்த முதலே, தாய்மரியின்வாழ்க்கையில் இன்னல்கள் பலகுறுக்கிட்டன. பல்வேறுசந்தர்ப்பங்களில் அவளது தூயஇதயம் வியாகுலத்தினுல் தாக்குண்டு நைந்தது. முக்கியமாக, ஏழு நிகழ்ச்சிகள் தாயின்புனிதவாழ்வில் மறக்கவியலாத சோகக்கட்டங்கள். அவைகள் வியாகுலவாள்களாக அன்னைமரியின் அமலஇதயத்தைக் தாக்கினஎன்பதால், அவளை "வியாகுலத்தாய்," "வேதசாட்சிகளின் இராக்கினி" என்றெல்லாம் சிறப்புப்பெயர்களால் அழைக்கிறோம்.

பத்துமாதம்காத்திருந்து தாம் பயின்ற அழகுக்குழந்தையை அணைத்தேந்தி ஆலயம்செல்கிருள் அன்னைமரி. அருகேநிற்கிருர் சூசையப்பர். தேவதிருக்குழந்தையைக் கண்டபின்னரே சாகவேண்டுமென வரம்பெற்றிருந்த சிமையோன்எனும் பெரியார் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் தேவாலயத்துக்கு வருகிருர். குழந்தையைக் கரத்தில்ஏந்துகிருர். "அவர்களைஆசீர்வதித்து, அவருடையதாயாராகிய மரியம்மாளைநோக்கி: இதோ, இவர் இஸ்ருயேலில் அநேகருக்குக் கேடாகவும், உத்தானமாகவும், விரோதிக்கப்படும் குறியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிருர். உமதுஆத்துமத்தையும் ஒருவாள் ஊடுருவும்!...என்ருர்" (லூக். 2: 34, 35)

அன்னைமரி திடுக்கிடுகிருள். என்ன, சமாதானத்தின் தூதரென சாற்றப்பட்டபைங்கிளியா "அநேகருக்குக் கேடாக" இருப்பார்? பிறந்தஅன்றே "நன்மனதுள்ளவர்களுக்குச் சமாதானம்" கொண்டுவந்ததாகத் தேவதூதர் வாழ்த்தினரே, அந்தஅமைதியின் அரசரா "விரோதிக்கப்படும் குறி"? எனது ஆத்துமத்தையும் ஒருவாள் ஊடுருவுமாமே! எப்போது? ஏன்? எதற்காக?... புரியாதநிலையிலும், சிமையோனின்வார்த்தைகள் மீண்டும் மீண்டும் மனதில்எழுந்து மாசற்ற மரியன்னையை வாதித்தன. எந்த நிமிடம் தமதுமைந்தன் "அநேகருக்குக் கேடாக, விரோதிக்கப்படும்குறியாக" இருப்பாரோ என்ற ஏக்கத்தில், எந்தநாள் தமதுஇதயம் வாளினுல் ஊடுருவப்படுமோ என்றஅச்சத்தில் நாட்கள்வாரமாகி, வாரங்கள் மாதமாகி, ஆண்டுகளாகஉருண்டன.

மரியன்னையின் இதயத்தை இரண்டாவதுவாள் தாக்கும் நேரம் விரைவில்நெருங்கியது. கீழ்த்திசைப்பெரியார்கள் குழந்தையேசுவை ஆராதித்துச் சென்றபின் எஜிப்துநாட்டிற்கு ஓடிப்போகும்படி தேவகட்டளை பிறக்கிறது. தாயின்நடுக்கத்தை, அச்சத்தை, ஆச்சரியத்தை எண்ணிப்பாருங்கள். தேவபராமரிப்பில் முழுநம்பிக்கை கொண்டிருந்தபோதிலும், "பிள்ளையைக் கொல்வதற்கு ஏரோதன்தேடுகிருன்; ஓடுங்கள்உடனே" எனத் தேவதூதனே எச்சரித்தபோது, தாயின்உள்ளம் எப்படிப் பதறிப் போயிருக்கும்! இரவின் இருளில், சந்தடிசெய்யாமல் அடிமேல்அடி எடுத்துத் திருக்குடும்பம் பதுங்கிச்செல்கிறது. வேதனையால் நைந்த இதயத்தோடு தமது அன்புக்குழந்தையை அணைத்துக் கொண்டு இதுவரைகண்டிராத தூரதேசத்துக்குப் பயணமானுள்.

ஆனுல், இந்தஅஞ்ஞாதவாசம் அதிககாலம் நீடிக்கவில்லை. திருக்குடும்பம் நசரேத்துக்குத் திரும்பிவந்து ஆண்டுகள்பல ஆயின. பாலயேசு பன்னிருவயதுப்பையனுகை, துறுதுறுத்த பார்வையுள்ள துடுக்கானமிடுக்குடன் வளர்ந்துவந்தார். அவரைக்காணுந்தோறும் பரவசமானுள் அன்னைமரி. அவரைப் பற்றியே எப்போதும் யாரிடமும் பேசினுள். சதா தமதுபாலயேசுவின் சிந்தனைதான் அவளுக்கு, அவர் ஜெருசலேமில் காணுமற் போனுர் என்ருல்......! கேட்கவேண்டுமா தாயின்துயரத்தை? மூன்றுநாட்களாக மூலைமுடுக்கெல்லாம், ஜெருசலேமின்வீதியெல்லாம் தேடுகிருள். "நான் கவலைக்குறைவாக இல்லையே! என்குழந்தை குறும்புசெய்பவர் அல்லவே!... இங்குஇருப்பாரா?...ஐயோ, இங்கேயும் காணுமே! உறவினருடன் ஊர்கடந்து சென்ருரோ?..." ஒரேஏக்கம், தவிப்பு, பிரலாபம்! இறுதியில் தமதுமைந்தனை ஆலயத்தில்கண்டதும் மாய்ந்ததுதுயர்; பாய்ந்தது மகிழ்ச்சிவெள்ளம். மூன்றுநாட்களே அவளைவிட்டுப் பிரிந்திருந்த யேசு பின்னர் முப்பது ஆண்டுகள் அவளைவிட்டுப் பிரியவில்லை.

உலகஇன்பம் நீடித்திருப்பதில்லை. யேசுவின் அமைதிவாழ்விற்கும் ஒருமுடிவுவந்தது. "சென்றவிடமெல்லாம் நன்மை செய்து கொண்டுசென்ற" உத்தமரை உலுத்தர்கூட்டம்பிடித்து வதைத்தது. பாரச்சிலுவையைப் பாவப்பரிகாரமாக ஏற்றுத் தள்ளாடித் தத்தளித்து யேசு இரட்சகர் தமதுசிலுவைப்பாதையில் சென்ருர். திடீரெனக்கும்பலில் ஒருபரபரப்பு. சேவகரை விலக்கிக்கொண்டு ஒருபெண்—கைதியின்தாய் வந்துநின்ருள். தமதுமாசற்றமைந்தன் தூசிபடிந்து, புழுதியில்புரண்டு, இரத்தக்கறைகளுடன், முள்முடி சகிதம் அலங்கோலமாகச் சிலுவைசுமந்துவருவதைக் காண்கிருள். தாயின்துயரத்தை என்னவென்போம்!

ஒருகணம் ஆண்டவர்நிற்கிருர். அன்புத்தாயை நோக்குகிருர். ஒருவரும்பேசவில்லை. இரு மாசற்ற உள்ளங்கள் வேதனைக் கடலில் ஒருமித்தன. தேவதிருவுளத்தை நிறைவேற்ற ஆண்டவர் தொடர்ந்துசென்ருர்.

யேசு கல்வாரிஉச்சியை அடைந்தார். தாயின்வியாகுலமும் உச்சநிலையை அடைந்தது. டமார் டமாரென விழுந்த சுத்தியலின் அடிகள் ஆண்டவரின் உடலில் மட்டுமல்ல, அன்னைமரியின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# உலகின் மூன்றுவது பெரிய நகரம்

— "வீரகேசரி" ஞாயிறு இதழ் ஆசிரியர் திரு. வி. லோகநாதன் அவர்கள் —

மேற்குஜேர்மனியிலுள்ள தொழில் வளமிக்க எஸென் நகரிலிருந்து மோட்டார்மூலம் டுஸெல்டோவ் – லோகாசென் விமானநிலையத்தை அடைந்தோம். பின்னர் விமானமூலம் பேர்லின்நகரைநோக்கிப் பறந்தோம். இராநேரம் விமானப்பயணம் சுகமாயிருந்தது. உலகத்தின் மூன்றுவது பெரியநகரமாகிய பேர்லினைப் பார்க்கப் போகிறேமென்ற ஆவல் விமானவேகத்தையும் முந்திக்கொண்டு பறந்தது. சில மணி நேரத்திற்குள் விமானம் பேர்லின் நகர விமானநிலையத்தை அணுகியது. இராநேரமாதலால் இருள்கவிந்திருந்தது.

என்பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் ஐரோப்பியர் என்னைநோக்கி: "தாங்கள் முதன்முறையாக இப்பொழுதுதான் பேர்லின் நகருக்குப் போகிறீர்களா?" என்று கேட்டார். "ஆம்" என்று நான் தலையசைத்தேன். "அப்படியானால் அதோபாருங்கள், இராநேரத்தில் மின்சார விளக்குகளுக்கிடையே பேர்லின்நகர் சொலிக்கிறதை" என்றார். நானும் விமானத்தின் கண்ணுடிச்சன்னல்மூலம் கீழ்நோக்கிப் பார்த்தேன். ஒளிவிடும் நவரத்தின ஆபரணங்களைத் தரித்த ஓர் அணங்கை முன்னே கொண்டுவந்து நிறுத்தியதுபோல் அந்த இராவேளையில் ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகளிடையே பேர்லின்நகரம் காட்சிஅளித்தது.

மறுநாள் மேற்குப் பேர்லின் நகரின் முக்கியமான இடங்களைப் பார்வையிட்டேன். உலகிலுள்ள மிகப்பெரிய நகரங்களில் மூன்றுவதுஸ்தானத்தை வகித்துவருகிறது பேர்லின். இன்று அது மேற்கு—கிழக்கு என்று பிரிந்து கிடக்கிறது. மேற்குப் பேர்லின் நகர் அமெரிக்க பகுதி, பிரித்தானிய பகுதி, பிரான்ஸிய பகுதிஎன்று பிரிக்கப்பட்டிருக்கிறது. கிழக்குப்பேர்லின் சோவியற்பகுதியில் இருந்துவருகிறது. ஜேர்மனிதேசத்தவர்களின் பெருமைக்குரிய இந்தப்பிரசித்திபெற்ற பேர்லின் இன்றுவல்லரசுகளின் தலையீட்டினுல் பகுதி பகுதியாய்ப் பிரிந்திருக்கிறது. பலம்வாய்ந்தஜேர்மனி மேற்கு–கிழக்கு என்று பிரிக்கப்பட்டிருப்பதுடன் பேர்லின்நகரமும் பகுதிபகுதியாகப் பிரிக்கப்பட்டிருப்பது உலக வரலாற்றிலே சகிக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகத் தோன்றியது. இயற்கைக்கு விரோதமான இந்தப்பிரிவினையை ஜேர்மன்மக்கள் அதிககாலம் பொறுத்துக்கொண்டிருப்பார்களென்று எனக்குத்தோன்றவில்லை. என்றே ஒருநாள் அவர்கள் சேரத்தான்போகிறார்கள். ஜேர்மனி மீண்டும் தலைதூக்கத்தான்போகிறது.

சென்றசில ஆண்டுகளுக்குள் மேற்குஜேர்மனி யுத்த சேதங்களையெல்லாம் திருத்தி விரைவிலே முன்னேறிவருவது அதற்கான முன்னறிகுறியாகும். ஹிற்லரினுல்விளைந்த யுத்ததீவினையால் நாடுநகரமெல்லாம் அழிந்து என்ன செய்கிறதெனத் தோன்றுது தவித்த ஜேர்மன்மக்கள் இன்று திடநம்பிக்கையுடன் காணப்படுகிறார்கள். அமெரிக்காவின் பணஉதவியைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நாட்டின் கஷ்டங்களை உடனே போக்கத்தக்க பொருளாதார கொள்கையைப்பின்பற்றி வேலைசெய்து வருகிறார்கள். மகாயுத்தத்தின்போது பாழான நகரங்களையும், இடங்களையும் மீண்டும் புதுப்பித்துவிட்டார்கள். சரித்திரப் பிரசித்திபெற்ற கட்டடங்களைப் பழைய அழகுகெடாமல் திருத்தியிருக்கிறார்கள். புதிய அடுக்கு மாடி வீடுகள் பலவற்றைக் கட்டியிருக்கிறார்கள். பலதுறைகளிலும் முன்போல முன்னேற மேற்குஜேர்மன் மக்கள் ஊக்கமாக உழைத்துவருகிறார்கள். அவர்களின் உழைப்பும், புத்திநுட்பமும், விஞ்ஞான அறிவும், நட்புறவும் மேற்குஜேர்மனியைக் குறுகியகாலத்துள் மகாயுத்தத்தினுல் விளைந்த பாழ்நிலையிலிருந்து மீண்டும் முன்னேற்றப் பாதையில் வளர்ச்சிபெற வழிசெய்துவிட்டன. குறுகிய காலத்துள் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சாதனை பெரிதும் அதிசயமானது; பாராட்டத்தக்கது என்பதில் ஐயமில்லை. மேற்குஜேர்மனியை நேரில்பார்த்தகாரணமாக இதை என்னுல் திடமாகச் சொல்லமுடிகிறது. ஆனுல், கிழக்குஜேர்மனியின் நிலை என்ன? இதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஏனெனில், அங்குபோய் நிலைமையை நேரில்பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. ஆனுல், கிழக்குப்பேர்லின்நகரின் சிலபகுதிகளைமாத்திரம்நேரில்பார்க்கும்வாய்ப்புக் கிடைத்தது. அங்கு நான் பார்த்தவைகளிலிருந்து கிழக்கு ஜேர்மனியின் இன்றையநிலைமையைப்பற்றி ஒருமுடிவுக்கு வருவது உசிதமன்று. ஆனுல், கிழக்குப்பேர்லின்நகரில் கண்டவைகளைக் கொண்டு கிழக்குஜேர்மனியை நான் பாராட்ட முடியவில்லை. ஏனெனில், கிழக்குப்பேர்லினில் மகாயுத்தத்தின்போது சேதமடைந்த பிரமாண்டமான பல கட்டடங்கள் எல்லாம் இன்னும் திருத்தப்படாது பாழடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. மிகப்பெரிய கட்டடங்களையும், மாளிகைகளையும் பாழடைந்தநிலையில் காணும்போது நமது கண்கள் கலங்கத்தான் செய்கின்றன. இந்தக் கட்டடங்களை எல்லாம் திருத்திப் பழைய நிலைக்குக் கொண்டுவரும் ஆக்கவேலையில் கிழக்குஜேர்மனி இன்னும் கவனம் செலுத்தாததற்குத் தகுந்த காரணம் இருக்கலாம். என்ன இருந்தாலும் இந்தச் சீர்திருத்தபணியில் அது ஈடுபடாதது வருந்தத்தக்கது.

மேற்குஜேர்மனி ஜனநாயகத்திலும், தனிப்பட்டவர் சுதந்திரத்திலும் நம்பிக்கைவைத்து, அதற்கேற்றபடி சமஷ்டிக் குடியரசு அரசியல் திட்டத்தை வகுத்து இன்று ஆட்சிநடத்தி வருகிறது. தனிப்பட்டவர் சுதந்திரத்தை அழிக்கும் சர்வாதிகாரம் அரசாங்கத்திற்குக் கிடையாது. இந்தச் சமஷ்டிக் குடியரசு அரசியல்திட்டம் தற்காலிகமானதே. முழுஜேர்மனியும் ஐக்கியமானதும் ஜேர்மன்மக்கள் தங்களது பூரண வாக்குரிமைமூலம் புதிய அரசியற்திட்டத்தைவகுத்துக்கொள்ளவும் இன்றைய அரசியற் திட்டத்தில் இடம் அளித்திருக்கிறார்கள். ஆகவே, மேற்குஜேர்மனியர் ஐக்கிய ஜேர்மனியை ஆசிக்கிறார்கள் என்பது தெளிவாகும். ஆனுல், அதற்காக அவர்கள் கம்யூனிஸ்த கொள்கையை ஏற்கத் தயாராயில்லை என்பதைப் பலஅரசாங்க அதிகாரிகள், பத்திரிகாசிரியர்கள், அரசியல்வாதிகள், சாதாரண மோட்டர் வாகன சாரதிகள், வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் முதலியவர்களுடன் சம்பாஷித்தபோது நான் அறிந்தேன். ஜேர்மன் உத்தியோகஸ்தர்களில் அநேகர் "வாயிலைத் திறவுங்கள்" என்பதற்கான ஒரு சின்னத்தைத் தங்கள் மேற்சட்டையில் அணிந்திருப்பதை நான்கண்டேன். அச்சின்னம் ஒன்றை எனக்கும் அளித்தார்கள். கிழக்கு ஜேர்மனியைப் பிரித்துவைக்காமல பரஸ்பரம் எல்லோரும் ஜேர்மனி எங்கும் போய்வர வழி செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்தவே "வாயிலைத் திறவுங்கள்" என்னும் சின்னத்தை அவர்கள் அணிந்து வருகிறார்களாம். ஆனுல், கிழக்கு ஜேர்மனியின் வாயில் விரைவிலே திறக்கப்படுமா? விரைவிலே இதற்குப் பதில் சொல்வதற்கில்லை. சோவியற் ருஷியாவின் 'குடைநிழ'லில் கிழக்குஜேர்மனி கம்யூனிஸ்த கொள்கையின்படி அரசியற்திட்டத்தை அமைத்து ஆட்சி நடத்திவருகிறது. மேற்கு ஜேர்மனியோ பிரித்தானி, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளின் பக்கபலத்துடன் ஜனநாயக கொள்கையின்படி அரசியற்திட்டத்தை அமைத்து ஆட்சிபுரிந்து வருகிறது. இந்தநிலையிலே இரு ஜேர்மனியும சுலபத்தில ஐக்கியமாகிவிடுமா? இருஒரு பெரியகேள்விதான்! ஆனுல், ருஷியா, அமெரிக்கா, பிரித்தானி, பிரான்ஸ்முதலிய வல்லரசுகளிடையே ஒரு சமரச முடிவு ஏற்படும்வரை ஜேர்மன் பிரச்சினையோ — குறிப்பாக முதலில் பேர்லின்நகர பிரச்சினையோ சுமுகமாகத் தீராதெனலாம். ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டிருக்கும் வல்லரசுகள் இதற்கு இணங்குமா? வருங்காலம் தான் பதில்கூறவேண்டும்.

(தொடரும்)

# பொது வர்த்தமானம்

### தன்னுல் நம்பமுடியவில்லையாம்

"சீனப்படைகள் இந்தியபிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதாக வெளிவந்துள்ளசெய்திகளை என்னுல் நம்பமுடியவில்லை; பஞ்சசீல அடிப்படையிலே ஆசியநாடுகளின் ஐக்கியத்துக்காகப் பாடுபட்டுவரும் இவ்விரு நாடுகளுக்குமிடையிலே மனத்தாங்கல் இருக்கக் காரணமில்லை; ஆக்கிரமிப்புச் செய்தி உண்மையாக இருக்குமானுல் இந்தியகம்யூனிஸ்தர்கள் தாய்நாட்டின் ஆதிபத்தியஉரிமையைப் பாதுகாக்கத் தயங்கமாட்டார்கள்; ஆக்கிரமிப்புச் செய்தி ஒருகால் மேற்குவல்லரசுகள் கட்டிவிட்ட ஓர்கதையாக இருக்கக் கூடும்." இவ்விதம் யார்கூறுகின்றார்? இந்திய கம்யூனிஸ்தகட்சித்தலைவர் ஏ. கே. கோபாலன்என்பாரே.

### நாம் போராடியே தீருவோம்

"தங்களின் தாய்நாட்டைப் பாதுகாத்துக்கொள்ள இந்தியா போராடமாட்டாதென்று சீனக்கம்யூனிஸ்தர்கள் நினைப்பார்களானுல் அது அவர்களுடைய பெருந்தவறேயன்றி வேறென்றுமில்லை; சீனஇராணுவத்தின் நடவடிக்கையைப் புரிந்துகொள்ள முடியவில்லை; சீனர்கள் இந்தியமண்ணை ஆக்கிரமிக்கக் காரணமேயில்லை; உலக சமாதானத்துக்காகவே இந்தியா பாடுபட்டுவருகிறது; நாடுபிடிக்கும்ஆசை இந்தியாவுக்குக் கிடையாது; ஆனுல், யாரர்வது இந்தியாவை ஆக்கிரமித்தால் அதை நாம்பார்த்துக்கொண்டு இருக்கமாட்டோம்; இதைநான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; எல்லைகள் எமக்குப் புனிதமானவைகள்; அவைகளைப்பாதுகாக்க நாம் போராடியேதீருவோம்; சமாதானத்தில் நாட்டமுள்ள இந்தியா எங்கே போராடப்போகிறதென்று கம்யூனிஸ்தசீனு ஏமாந்துவிடவேண்டாம்" இங்ஙனம் யார்தெரிவித்திருக்கின்றார்? வாஷிங்ரன் நகரில் இந்தியஸ்தானிகராய் இருந்துவருகின்ற திரு. எம். சி. சக்ளா அவர்களே.

### இது 1963-ம் ஆண்டாம்

இப்போதுநடப்பது 1959-ம்ஆண்டு அல்ல, 1963-ம் ஆண்டு என்கிறார் காசேப்ஸ் என்ற கிரேக்க விஞ்ஞானசாஸ்திரி. கிறீஸ்துநாதர் பிறந்தஆண்டைக் கொண்டுதானே இப்போது வருஷம் கணக்கிடப்படுகிறது; கிறீஸ்துநாதர் 1959-ம்ஆண்டுகளுக்குமுன் பிறக்கவில்லை; 1963-ம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் பிறந்தாரென்று கூறுகிறார் இந்தக்கிரேக்க வானசாஸ்திரி. கிறீஸ்துநாதர் பிறந்தபோது வானத்தில் ஒரு பெருஞ்சோதி தோன்றியதாயும், அதைக்கண்ட ஞானிகள்மூவரும் அவர் பிறந்திருப்பதை அறிந்ததாயும் வேதாகமம் தெரிவிக்கிறது அல்லவா? வியாழன், வெள்ளி, சனிஆகிய மூன்றுகிரகங்களும் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குஒருமுறை ஒரேகோட்டில் இருக்கும்; அப்போது வானமண்டலத்தில் ஓர்பெருஞ்சோதி காணப்படும்; இற்றைக்கு 1963 ஆண்டுகளுக்குமுன் இந்த அபூர்வ கிரகசேர்க்கை ஏற்பட்டிருக்கிறது; அதைத்தான் வேதாகமம் குறிக்கிறதுஎன்றார் இந்தக்கிரேக்க வானசாஸ்திரி காசேப்ஸ். இதுபோன்று இன்னும்சில காரணங்களையும்சொல்லி இப்போதுநடப்பது உண்மையில் 1963-ம் ஆண்டுதான்என்று அவர்கூறுகின்றார். அவர் எதைக்கூறியும் இப்போதுநடக்கும் 1959-ம் ஆண்டை மாற்றமுடியுமா அவரால்?

### சிறிய எல்லைச்சம்பவமாம்

"இந்தியாவினுள்ளே சீனஇராணுவம் உட்புகுந்தது ஒருசிறிய எல்லைச் சம்பவம்; இதனைப் பத்திரிகைகளும், சில அரசியற்கட்சிகளும் பெரிதுபடுத்துகின்றன; இந்திய அரசாங்கத்தின் தொழில்வளர்ச்சிக்குக் கணிசமான அளவு உதவிபுரிந்துள்ளநாடுகளின் கோஷ்டியைச்சேர்ந்தசீனு ஒருபோதும் இந்தியாவில் படைஎடுக்காது; இந்திய–சீன நல்லுறவைக்குலைத்துக் கம்யூனிஸ்தர்களுக்குக் கெட்டபெயர் உண்டாக்கும் ஓர்முயற்சியாகவே சீனுபற்றியும், சீனப்படையெடுப்புப்பற்றியும் மக்களின்மனதில் பீதிஉண்டாக்கப்படுகிறது." இவ்வாறு யார் சொல்லுகின்றார்? இந்திய கம்யூனிஸ்ததலைவர்களில் ஒருவரான பி. இராமமூர்த்தி என்பவரே.

### உலக சமாதானத்திற்குப் பாதகம்

"உலக சமாதானத்திற்குச் செஞ்சீனு மாபெரும்பாதகம் இழைத்துவருகிறது. அதன்சமீபகால நடவடிக்கைகள் கெடுபிடியுத்தத்தை அதிகப்படுத்தி ஆசியாக்கண்டத்தையும், இந்தியாவையும் அந்தக்கெடுபிடி யுத்தம் சுற்றிவளைந்துகொள்ள உதவுவனவாய் அமைந்திருக்கின்றன. மேற்கிலே திரைநீக்கிச் சமாதானம் காட்சியளிக்கக்கூடிய சூழ்நிலைகள் உருவாகிக்கொண்டிருக்கும் இந்தவேளையிலே, ஆசியாவில் செஞ்சீனு சமாதானத்தைப் பங்கப்படுத்திவருகிறது. சீனுவின் நடவடிக்கைகள் இந்தியாவை மேற்கத்தியநாடுகளுடன் சேருமாறு தூண்டுவனவாயும், சோவியற்பிரசாரத்தைப் பொய்ப்பிப்பனவாயும் இருக்கின்றன." இப்படி யார்கூறுகின்றார்? திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்களே.

### செஞ்சீனு மறுக்கின்றது

சீனு ஏனையநாடுகளைச்சேர்ந்த பிரதேசங்களை எக்காலத்திலுமே ஆக்கிரமித்ததுமில்லை, சீனப்பிரதேசங்களை மற்றவர்கள் ஆக்கிரமிப்பதை அதுசகித்துக்கொண்டிருக்கப் போவதுமில்லையெனச் செஞ்சீனுவின் தலைப்பட்டணமாகியபீக்கிங்நகரிலே சீனவெளிநாட்டு மந்திரி திரு. சென் ஈ எச்சரிக்கை செய்தாரென்று தற்போது செய்தி கிடைத்திருக்கிறது. சீனப்படைகளின் ஆக்கிரமிப்புப்பற்றி இந்தியபிரதமர் வெளியிட்ட புகாருக்குப்பிறகு செஞ்சீனுவெளியிட்டுள்ள முதலாவதுஅறிக்கை இதுவாகும். உடனிருந்துவாழும் பஞ்சசீலக்கொள்கையில் சீனுவுக்குப் பூரணநம்பிக்கை இருக்கிறதென்றும், ஏகாதிபத்தியவாதிகளின் பிரசாரத்தை நம்பக்கூடாதென்றும் அங்குசமுகமாயிருந்த இந்தியஸ்தானிகரைப்பார்த்து அவர்கூறினுராம்.

# 3,000 அங்கிளிக்கன்சபைப் பாதிரிமார்

## திருச்சபையின் பக்கமாகத் திரும்புவார்களா ?

"பரிசுத்தஸ்தானத்தின் தலைமையை உண்மையென்று நம்புகிறவர்களாய் இங்கிலாந்துச்சபையிலே 1,000 விக்கார்கள் — அதாவது பாதிரிமார்கள் இருப்பதாகவும், முடிவில் கத்தோலிக்க திருச்சபையுடன் திரும்பவும் ஐக்கியமாக வேண்டுமென்று ஆசிக்கிறவர்களாய் மேலும் 2,000 பாதிரிமார்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது" என்று முன்னாள் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாரும், "த டோம்" எனப்பெயரிய கிறீஸ்தவ புனர்ஐக்கிய பத்திரிகையின் ஆசிரியருமான திரு. பிறெடெறிக் டேவிஸ்அவர்கள் கூறுகின்ருர். கத்தோலிக்க திருச்சபையிலே சேர்ந்துகொள்ளுமாறு திரு. டேவிஸ்அவர்கள் அன்றுபுதன்கிழமை லண்டனிலிருந்து ரோமாபுரிசென்றிருக்கின்ருர். அவர் பிந்தஅங்கே பீடாகுருமடத்தில் குருப்பட்டத்துக்குப் படித்துவருவார்.

தாம் இங்கிலாந்துச் சபையை விட்டுப் பிரியப்போவதை இருவாரங்களின்முன் அவர்பிரசித்தமாக அறிவித்தபோது, இங்கிலாந்திலோ "மாற்றமான சபை" ஒன்றிற்கான தமதுதிட்டத்தை— அதாவது தனது ஆரம்பகட்டங்களிலே விவாகமான பாதிரிமாரையும், ஆங்கிலதிருவழிபாட்டையும் கொண்டிருக்கக்கூடிய தமது திட்டத்தை வெளியிட்டார். இந்தத்திட்டம் பரிசுத்தஸ்தானத்தாலே கருத்தாக ஆராயப்பெற்றுத் தள்ளிவிடப்படலாயிற்றென்றும் அவர்தெரிவித்தார்.

மேலும்அவர் கூறியதாவது: புறெட்டஸ்தாந்த சர்வசாதாரணத்துவத்திலும், புறெட்டஸ்தாந்த சன்மார்க்க போதகத்திலுள்ள அதன்போக்கிலும் இங்கிலாந்துச்சபையின் பழையபோதகமானது தனதுகுருமாருள் அநேகரின்நிலைமையைத் தற்காப்பற்றதாக்கி வருகின்றது. அதனால் அவர்கள் முடிவிலே பரிசுத்தஸ்தானத்தினிடமாகத் திரும்புவதைப்பற்றிச்சிந்திக்க அது வழிபண்ணுவதாகும். பிரிவினைச் சபைப் போதனையைப் படிப்பிப்பதற்கு அநேக அங்கிளிக்கன் சபைக்குருமார் முயற்சிக்கின்றனர். ஆனால், தங்கள்சொந்த அதிகாரிகளாலே தங்கள்பணி வஞ்சனையாற் கெடுக்கப்படுவதை அவர்கள் காண்கிருர்கள். ஆங்கிலோ-கத்தோலிக்க இயக்கமும் தக்க நேரத்தில் ஆட்சேபிக்க அலட்சியமாயிருந்தமையால் தனது ஆதிக்கத்தை எவ்வளவோ தூரம் இழந்துபோய்விட்டது. 1920-ம்ஆண்டுநிகழ்ந்த லம்பெத் மகாநாடு பிறப்புக்கட்டுப்பாட்டுடன் ஒத்துப்போனகாலத்திலும், அதேவருடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட புறெட்டஸ்தாந்த சர்வசாதாரணத்தின் ஆரம்பத்திலும் ஆங்கிலோ-கத்தோலிக்க இயக்கத்திற்கு ஓர்நல்லசந்தர்ப்பம் கிட்டியது. அப்போது அது எதிர்பேசியிருக்கவேண்டும். ஆனல், அது அவ்வாறுசெய்யவில்லை. அதனுல்அது சந்தர்ப்பத்தை இழந்துபோய்விட்டது.

### குருவானவரைச் சுடமறுத்த ஜேர்மன் போர்வீரர்

ஓர்இத்தாலிய விசாரணைப்பங்குக் குருவானவருக்கும், இன்னாரென்று அறியப்படாத ஓர்ஜேர்மன்போர்வீரருக்கும் இத்தாலியிலே வெரோனு நகரின் வடபாலுள்ள பேட்ரிக்கணவாயில் ஞாபகசின்னம்ஒன்று திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளது. குருவானவர் டொன்டொமினிக்கோ மெர்கான்ரோ சுவாமியாரே இவர் ஜியாஸாவின் பங்குக்குருவராய் இருந்தவர். 1945-ம்ஆண்டு ஜேர்மன்சேனை புறங்காட்டிச் சென்றபோது ஜேர்மனிய எஸ். எஸ். படைவகுப்புஒன்ருல் இவர் கைதுசெய்யப்பெற்றுப் பிந்த அதனல் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்தஜேர்மன் போர்வீரர் ஓர்கத்தோலிக்கர். இந்தக் குருவானவரைச் சுடுவதிலே கலந்துகொள்ள இவர்மறுத்துவிட்டார். அதனல் இவருமே சுட்டுக் கொல்லப்பட்டார்.

---

### ஊர்து திருப்பதியில் நோயாளரான 300குருமார்

நோயாளர்களும், யாதோஒரு நோயினல் பாதிக்கப்பட்டவர்களுமான சுமார் 300 குருமார் சமீபத்திலே இத்தாலியிலிருந்து ஊர்துபதிக்கு யாத்திரைபோயிருந்தனர். இவர்கள் வேறுகுருமார், நான்குமேற்றிராணிமார் சமேதராய் அங்குசென்றிருந்தனர். பன்னிருவருடங்களாகத் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்க இயலாதிருந்த ஓர்குருவானவரால் அத்திருப்பதியில் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது தூக்கிச்செல்லும்படுக்கைஒன்றிலே அவர்பலிபீடத்திற்குச் சுமந்துசெல்லப்பெற்ருர். அங்கு நான்குகுருமார் அவருக்குத் துணைசெய்தார்கள். சுமார் இருநூறுகுருமார் நோய்கண்டிருந்தபோதிலும் நடக்கக்கூடியவர்களாய் இருந்தார்கள். மீதியான நூறுகுருமாரும் தூக்கிச்செல்லும் படுகைகளிலும், சில்லுக்கதிரைகளிலும் ஏனைய குருமாராலும், மேற்றிராணிமாராலும், அர்ச். தேவஅருளப்பர் சபை பிறதர்மாராலும், கமிலியன்சபைக் குருமாராலும் தூக்கிச்செல்லப்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கொண்டுசென்றபுஷ்பங்கள் அவர்களின் துன்பவருத்தங்களினதும், வாழ்க்கையினதும் சின்னமாக மாதாவின்கெபியில் சாத்தப்பட்டன. ஊர்துபதியின் தியாஸ்மேற்றிராணியார் அவர்களைவாழ்த்தி வரவேற்றுகின்ருர். பாப்பரசர் ஓர் விசேஷசெய்தி அனுப்பியிருந்தார்.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

# இலங்கை மரியாயின் சேனையாளர்

## ஆபிரிக்கா செல்லுகின்ருர்

ஆபிரிக்காவுக்கு மரியாயின் சேனைத்தூதராக நியமனஞ்செய்யப்படும் விசேஷகௌரவம் அருளப்பெற்றுள்ள இலங்கை மரியாயின்சேனையாளர் திரு. யோசெவ் பிலேந்திரம்அவர்கள் ரோமாபுரியிலிருந்து சென்ற 25-ந்திகதி செவ்வாய்க்கிழமை விமானமூலம் தமது நியமனஸ்தானஞ் சென்றிருக்கின்ருர். அவர் ரோமாபுரியில் தங்கியிருந்தபோது அருளப்பபாப்பரசரின் பேட்டிபெற்றுக் கொண்டார். அப்பேட்டியின் போது பரிசுத்தபிதா அவருடைய புனிதபணியில் பெரிதும்கரிசனை காண்பித்து அவரையும், அவருடைய அப்போஸ்தல திருத்தொண்டையும் ஆசீர்வதித்தருளினர். விசுவாசப்பரப்புதல் திருச்சங்கதலைவரான கருதினல்ஆண்டவரும் அவரைச்சந்தித்து ஆசீர்வதித்தார்.

திரு. பிலேந்திரம் அவர்கள் செவ்வாய்க்கிழமையன்று 53ஆங்கிலசேனையாளர்கள் குழுவொன்ருல் ரோமைநகர் விமானநிலையத்திலே மனவருட்சிக்குரிய அன்பான ஓர்பிரியாவிடை அருளப்பெற்ருர். ஏனெனில், அவர் இவர்களுடன் ஐந்துவருடகாலம் லண்டன்நகரிலே தொண்டாற்றியிருக்கின்ருர். அதனல் இதற்கென்றே அவர்களெல்லாம் ரோமைநகருக்கு வந்திருந்தார்கள்.

ஆபிரிக்காவுக்கு ஓர்மிஷனரியாகப் போய்க்கொண்டிருக்கிற ஓர்இலங்கைத் தமிழ்மகனுக்குத் தேவானுக்கிரகத்தையும், சித்தியையும்ஆசித்து அவரை வழியனுப்பிவைக்க ஆங்கில, இத்தாலிய சேனையாளரும், இவர்களுடன் சீனதேச மரியாயின்சேனை வீரர்திலகமான வண. அய்டான் மைக்கிருத்சுவாமிகளும் ஒன்றுகூடியிருக்கக் காணப்பட்டமை ஓர்மனவெழுச்சிக்குரிய காட்சியாயிருந்தது.

திரு. பிலேந்திரம் அவர்கள் ஆவணிமாதம் 26-ந்திகதியன்று நைரோபி நாடு போய்ச்சேர்ந்து மரியாயின்சேனைக்குரிய தமது பணிகளைத் தொடக்கிநடத்துவதற்குக் குறிக்கப்பெற்றிருந்தார் என்பதுஈண்டுகுறிப்பிடத்தக்கது.

—✱—

### வேனிற்கால மாளிகையிலே முதலாவது திருமணம்

ரோமாபுரிக்குவெளியே அல்பான்குன்றுகளிலுள்ள பாப்பரசின் வேனிற்காலமாளிகையான காஸ்தெல்-காந்தல்போவிலுள்ள தம்முடைய பிரத்தியேகசிற்றாலயத்தில் பரிசுத்தபாப்பரசர் சமீபத்தில் ஓர்திருமணத்தை நிறைவேற்றிவைத்தார். மணமகள் ஓர் ஜேர்மனிய பத்திரிகைஎழுத்தாளரும், ரோமாபுரியிலே அநேக வருடகாலம் சஞ்சரித்திருப்பவருமான செல்வி ஈவா மரியா ஜங். மணவாளன் ஓர்கிரேக்கரும், சாதாரண-கத்தோலிக்கரது அப்போஸ்தலத்துவ தொண்டுகளின் சர்வதேச மகாநாடுகள்சபையின் நிரந்தரகம்மிற்றியில் ஓர்அங்கத்தவருமான டக்றர்எமில் இங்கிளெஸிஸ். இருசாட்சிகளையும், புதுமணத்தம்பதிகளின் பெற்ருர், நெருங்கிய சுற்றத்தவர்களையும், பாப்பரசரின் பரிவாரத்தைச்சேர்ந்த சிலரையும்தவிர வேறெவரும் அதற்குச் சமுகமாகவில்லை. திருமண வைபவத்தின்முடிவிலே பாப்பரசர் மணவாளிக்கு வெள்ளியால் இழைக்கப்பட்ட ஓர்செபமாலையையும், முடிசூட்டுவிழாத் தங்கப்பதக்கம்ஒன்றையும், எழுத்துமூலமான தமதுஆசீர்வாதத்தையும் அன்பளிப்புச்செய்தார். இத்திருமணம் காஸ்தெல் காந்தல்போவில் பாப்பரசர்ஒருவர் நிறைவேற்றிய முதலாவதுதிருமணமாகும்.

---

### கிறீஸ்துநாதரின் பாரிய சுரூபம்

இரண்டாவது உலகயுத்தத்திலே பிலிப்பைன்ஸ் தீவுகளைச் சேர்ந்த கொறெஜிடர்தீவில் உயிர்துறந்த அமெரிக்க, பிலிப்பினிய போர்வீரர்களின் ஞாபகார்த்தமாகக் கிறீஸ்துநாதரின் பிரமாண்டமான சுரூபம்ஒன்றை ஸ்தாபிப்பதற்கான ஆயத்தம் நடக்கின்றது. இதற்கென ஏற்படும் செலவுபணமாகிய 50லட்சம் டலரையும் தங்களுள்பகிர்ந்து உதவுவதற்கு அமெரிக்க, பிலிப்பைன்ஸ் அரசாங்கங்கள் உடன்பட்டிருக்கின்றன. கிறீஸ்துநாதரின் இந்தச்சுரூபமானது அமெரிக்க, பிலிப்பினிய போர்வீரர்களாலே சுதந்திரத்தைப் பாதுகாக்கச் செய்யப்பட்ட வீரத்துவ தியாகத்தை நிகழ்கால சந்ததியாருக்கும், எதிர்கால சந்ததியாருக்கும் ஞாபகமூட்டுவதாய் இருந்துவரும். இன்னும் கம்யூனிஸமும், நாஸ்திகமுமாகிய இருளடர்ந்த பலங்களைஎதிர்த்து ஒளியின் சின்னம்போன்று அதுஓர் அரண்மீது என்றைக்கும் நிறுவிநிற்கும். மேலும், "பிலிப்பைன்ஸ் ஓர் கிறீஸ்தவ இராச்சியம்" என்பதை அது பிரகடனஞ்செய்துகொண்டிருக்குமென்று சுரூபஸ்தாபகம்மிற்றி அறிவித்திருக்கின்றது.

## புரட்டாசி மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்தவகுடும்பங்களில் திருச்சபைக்காக உழைக்கும் உணர்ச்சி செழித்தோங்கும்படியாக வேண்டிக் கொள்வது.

**வேதபோதககருத்து:** தென் ஆபிரிக்க சாதிபேதச்சச்சரவு கிறீஸ்தவகொள்கைக்கொப்ப ஒதுக்கப்பட வேண்டுமென மன்ருடிக்கொள்வது.

* * *

## காலை ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 10-ந் திகதி

## சமாதானம் நிலவுமா?

பிரதமர்பண்டாரநாயகா அன்றுவியாழக்கிழமை அல்லாலமுல்லை எனுமிடத்திலே ஒருபுதிய பாடசாலைத் திறப்புவிழாவில் பேசியபோது: "இந்தச்சிறியதீவில் சகலசாதியங்கள்மத்தியிலும் சமாதானம்நிலவவேண்டும்; நாமெல்லாம் உடன்பிறந்த சகோதரர், சகோதரிகள் போல வாழ்ந்துவரவேண்டும்" என்று அழகாகப்பேசியிருக்கிறுரென அறியவரும்போது, இந்தச்சிறியதீவாகிய ஸ்ரீலங்காமக்களில் எவர்தான் அவரைச் சமாதானப்பிரியரென்று பாராட்டாதிருக்கமுடியும்? தமது ஆட்சிகாலம் சமாதானமும், சுபீட்சமும், சௌபாக்கியமும், சந்தோஷமும் நிலவிய ஓர் சுபகாலமென்றும், தமதுஆட்சிகாலத்திலே இச்சிறியதுவீபமக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லீம்களென்ற சாதியபேதமின்றியும், புத்தர்கள், இந்துக்கள், கிறீஸ்தவர்கள், முஸ்லீம்களென்ற சமயபேதமின்றியும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போன்று வாழ்ந்துவந்தார்களென்றும் வருங்காலசரிதாசிரியர்கள் புகழ்ந்துவர்ணிப்பார்களானல் அவர்ஓர்பாக்கியவான்— ஏதோகொடுத்துவைத்துப் பிறந்தவர்தானென்று உள்ளங்குளிர்ந்து எதிர்காலசந்ததிகள் பெருமிதம்கொள்ளுமன்றே!

நிற்க, பிரதமர்பண்டாரநாயகா ஆட்சிநடாத்தியிருக்கின்ற சுமார் மூன்றரை வருடங்களிலும் நிகழ்ந்துள்ளவைகளையும், அவற்றால் விளைந்துள்ளவைகளையும் ஒன்றென்றாய்— ஒன்றின்பின் ஒன்றாய் ஆராயுமிடத்துச் சரித்திரம்யாதுசொல்லும்? பலநூற்றாண்டுகளாக ஒருதாய்பெற்ற பிள்ளைகளைப்போன்று— உடன்பிறந்த சகோதரங்களைப் போன்று உயிர்வாழ்ந்திருந்த சிங்களவரும், தமிழரும் பிரதமர் பண்டாரநாயகா ஆட்சிப்பீடத்தில் அமர்ந்ததே பிளவுபடநேர்ந்தது. வகுப்புவாதம் எழுந்தது. வகுப்புக்கலவரம் பிறந்தது. இன்றுதானும் அதைப்பற்றிச் சிந்திக்கும்போது, அம்மம்ம! எமதுநாட்டில்இப்படியானகோரமும் நிகழ்ந்ததேயென்றுதான் உள்ளம்வருந்துகின்றது. அன்று ஒருவர் பிரதமர்பண்டாரநாயகாவின் அரசாங்கத்தைப்பற்றி எழுதியவிடத்து: "ஒருபிரச்சினையும் அதனல் ஒழுங்காகத் தீர்க்கப்படவில்லை. பல்லாண்டுகாலம் ஒன்றுபட்டுவாழ்ந்த சிங்கள, தமிழ்மக்களிடையே பிரிவினையைஉண்டுபண்ணி இனக்கலவரத்தைச் சிருட்டித்ததே இந்த அரசாங்கத்தின் பெரும்பணியாக அமைந்தது. சோஷலிஸம் என்பது வெறும்பேச்சளவில்தான் இருந்துவருகிறது. ஏழைகளுக்கும், தொழிலாளருக்கும் இந்தஅரசாங்கத்தினல் முன்னேற்றம் எதுவுமில்லை. வேலையில்லாத் திண்டாட்டநெருக்கடி வலுவடைந்துவருகிறது. உணவுப்பொருட்களின் விலைகள் விஷம்போல் உயர்ந்துள்ளன. கைக்கூலிவழங்காமல் இந்தஅரசாங்கத்தில் எந்தக் கருமமும் நிறைவேற்றமுடியவில்லை" எனவரைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

நிற்க, வகுப்புக்கலவரம் நடைபெற்றுச் சுமார்பதினைந்துமாதங்கள் கழிந்துவிட்டன. இலங்கை அதன்விளைவுகளிலிருந்து இன்னுமே மீளவில்லை. அங்ஙனமாக இனிமேல் மதக்கலவரம் ஏற்படக்கூடுமோ என்றஅச்சம் மக்களது உள்ளங்களில் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. அன்று சனப்பிரதிநிதிகள்சபையிலே மன்னார் எம். பி. திரு. வீ. ஏ. அழகக்கோன் அவர்கள் பேசியவிடத்து: "சென்றஆண்டு வைகாசிமாதத்திலே சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே வகுப்புக்கலவரம் உண்டாக்கப்பட்டு அதனல் ஏற்பட்ட விபரீதத்தை நாம்பார்த்தோம். இப்பொழுது சமயவேற்றுமை கிளப்பப்படுகிறது. இது மிகமோசமானவிளைவை உண்டுபண்ணும். சிங்களவரும், சிங்களவரும் அடிபட்டுச்சாக இது வழிவகுக்குமென்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். வெலிமடை எம். பி. திருமதி இராஜரத்தின அடிக்கடி கத்தோலிக்கசமயத்தை இழுத்துப்பேசுவது எனக்கு அதிகம்மனவேதனையை உண்டுபண்ணுகிறது" எனக்கூறியிருப்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது. வெலிமடை எம். பி. மாத்திரமல்ல, வேறு எம். பி. களும், பிறரும் சனப்பிரதிநிதிகள்சபையிலும், மற்றும்பொதுக்கூட்டங்களிலும் கத்தோலிக்க சமயத்தைத் தாக்கிப்பேசுவது சகசமாகிவிட்டது. அன்று தெகியோவித்தை எம். பி. திரு. எட்மண்ட் சமரக்கொடி சனப்பிரதிநிதிகள் சபையில் பேசியபோது: "சமயவேறுபாடுகாட்டுவதை மக்கள்ஒழிக்காவிடின் ஐக்கியம் இருக்கமுடியாது; சிலபிரிவினர் கத்தோலிக்கருக்குஎதிராகப் போர்தொடுக்க எத்தனிக்கும்போது ஐக்கியப்பட்டமக்கள் இருக்கமுடியா"தெனக் கூறியிருக்கின்றார். இவைகளையெல்லாம் பிரதமர் நன்கறிந்திருந்தும் மவுனம்சாதிக்கவேண்டிய காரணம்என்ன? பல்வேறுகலவரங்களாலும் தனது ஆட்சிகாலம் சிறக்கவேண்டும் என்பதா?

---

## இந்தியாவும் செஞ்சீனவும்

செஞ்சீனவின் தேசப்படம் ஒன்று சமீபத்திலே அதிகாரமுறையில் பீக்கிங்நகரிலே வெளியிடப்படலாயிற்று. அதிலே இந்தியாவைச்சேர்ந்த சுமார்முப்பதினயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள் சீனவுடன் சேர்க்கப்பட்டுள்ளன. சீனவின் படத்திலே இந்தியாவின் பகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பதையிட்டு இந்தியபிரதமர் நேரு ஆட்சேபனைதெரிவித்தும் சீன பதிலளிக்கவில்லை. மக்மோகன் எல்லைக்கோடுதான் இந்தியாவின் வடஎல்லைப்புறமென்று இந்திய அரசாங்கம் இதுவரை கருதிவந்தது. இந்தஎல்லைக்கோடு 1913-ம் ஆண்டுநடைபெற்ற சிம்லாமகாநாட்டிலே வகுக்கப்பட்டது. அப்போது ஓர்உடன்படிக்கையும் செய்யப்பட்டது. இந்தஎல்லைப்புறத்தை என்னவந்தாலும் இந்தியா உறுதியோடு பாதுகாக்குமென்று பிரதமர் நேரு தெரிவித்திருக்கின்றார். அவ்வாறாக இந்தியாவின் வடகிழக்குஎல்லையில் சீன ஓர்புதிய வீதியைத் திறந்திருக்கிறதென்றும், இந்தவீதியிலே நூற்றுக்கணக்கான சதுரமைல்விஸ்தீரணமுள்ள இந்தியபிரதேசங்கள் செஞ்சீனவில் அடங்கியிருக்கின்றனவென்றும் செய்திபரந்திருக்கிறது.

நிற்க, இந்தியாவின் வடகிழக்கு எல்லையிலுள்ள லோங்ஸு—எனுமிடத்தை ஆக்கிரமித்துள்ள சீனப்படைகள்மீது இந்திய காலாட்படைகள் எதிர்த்தாக்குதலை ஆரம்பித்துள்ளன. சீனப்படைகளை எதிர்த்துப் போராடும் இந்தியபடைகளுக்கு விமானமூலம் வெடிமருந்துகளும், உணவுப்பொருட்களும், மற்றும் ஆயுதங்களும் உதவப்படுகின்றன. அதேசமயம் இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்பகுதிகளில் சீனப்படைகளின்நடமாட்டம் அதிகரித்திருப்பதாயும், அவைகளுக்குத்தேவைப்படும் போர்த்தளபாடங்கள் கோவேறுகழுதைகளில் சுமந்துவரப்படுவதாயும் தெரியவருகிறது. இதற்கிடையிலே சீனக்கம்யூனிஸ்த பத்திரிகைகளோ இந்தியாவுக்கு ஏகாதிபத்தியவெறி பிடித்திருப்பதாகப் பிரசாரஞ்செய்து இந்தியாவைத் தாக்கத்தொடங்கியிருக்கின்றன. மேற்கத்திய ஏகாதிபத்தியநாடுகள் மத்தியகிழக்குநாடுகளிலே கொந்தளிப்பை உண்டுபண்ணமுயன்றுவருகின்றன என்று சீனப்பிரதமர் சூ என் லாய் கொந்தளித்து அவற்றின்மேல் பழியைச்சுமத்துகின்றார். "இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் செஞ்சீன கைப்பற்றியிருக்கும் நிலையங்களை இந்தியாதிரும்பக் கைப்பற்றியேதீரும்; சீனப்படைகள் ஆக்கிரமித்துள்ளபகுதிகள் அத்துணைமுக்கியத்துவம் வாய்ந்தனஅல்ல; ஆனல், அவைகள் இந்தியாவின்கௌரவத்தைக் குறைத்துவிட்டன; சீனப்படைகள் செய்திருப்பது ஆக்கிரமிப்பைத்தவிர வேறென்றில்லை; ஆக்கிரமிப்பு சிறிதாயினுஞ்சரி, பெரிதாயினுஞ்சரி, அதனை இந்தியா சகித்துக்கொண்டிராது" என்று ஐக்கியஅமெரிககதேசத்திலே இந்தியஸ்தானிகராய் இருந்துவருகின்ற திரு. எம். சி. சக்ளா தெரிவித்திருக்கின்றார். ஆசியநாடுகளின் ஆப்தநண்பனைப்போல் பேசியும், பழகியும் வந்த செஞ்சீன முன்னெச்சரிக்கையின்றியே இந்தியாவின் எல்லையில் மோதத்தொடங்கியிருப்பது ஆச்சரியமல்ல. ஆனல், தனதுஉற்றநண்பனுன பிரதமர் நேருவிடம் செஞ்சீன நன்றிகேடாய் நடந்துவிட்டதுதான் பேராச்சரியம்என்க.

---

### கண்டிப் புதியமேற்றிராணியார்

கண்டிநகரின் புதியமேற்றிராணியாரான மகாவந். லேயோ நாணயக்கார ஆண்டவரவர்கள் நிகழும்புரட்டாசிமாதம் 1—ந்திகதி செவ்வாய்க்கிழமை நடந்தேறிய ஆடம்பரமற்ற ஓர் திருவைபவத்திலே தமதுமேற்றிராசன ஆட்சிப்பொறுப்பைக் கையேற்கலாயினர். புதியமேற்றிராணியாரின் அபிஷேகதிருவைபவம் அடுத்துநிகழும் ஐப்பசிமாதம் 3—ந்திகதி சனிக்கிழமை குழந்தையேசுவின் அர்ச். தெரேசம்மாள் திருநாளன்று நடைபெறவிருப்பதாக அறிகின்றோம்.

---

### பிறகுதான் கண்திறபட்டது

"சிங்களத்தை உத்தியோகமொழி ஆக்குவதற்காக முதலில் தயாரிக்கப்பட்ட மசோதாவிலே மந்திரிகளின் விருப்பப்படி நியாயமான தமிழ் உபயோகத்திற்கும் இடம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனல், பிரதமர் பண்டாரநாயக்கா செய்தது என்ன? அந்தச் சட்டத்தை இரு துண்டுகளாக்கித் தனிச்சிங்கள சட்டத்தைமட்டும் கொண்டுவந்து நிறைவேற்றினர். அதன்விளைவாக நாடெங்கும் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. பல ஆயிரக் கணக்கானநிரபராதிகள் உயிரிழக்கவும், பொருட்கள் சேதமடையவும் நேர்ந்தது. இச்சம்பவத்துக்குப் பின்னர்தான் திரு. பண்டாரநாயகாவுக்குக் கண்திறபட்டது. உடனே நியாயமான தமிழ் உபயோகத்துக்கென மற்றோர் சட்டத்தை இயற்றினர். என்றாலும் இவ்விருசட்டங்களும் இன்னும் ஏட்டளவில்தான் இருந்துவருகின்றன."

திரு. பிலிப் குணவர்த்தன,
முன்னாள் உணவு-விவசாய மந்திரி

### அதிகாரத்துக்கு வந்தால்!

"சிங்கள ஜாதிகசங்கம் அதிகாரத்துக்கு வந்தால் என்ன நடக்கும்? கிறீஸ்தவர்களும், முஸ்லீம்களும், தமிழரும் இந்நாட்டில் தொடர்ந்து வாழ்ந்துவரலாம். தற்போதுள்ள கத்தோலிக்க கோவில்கள் அந்தப்படியே தொடர்ந்து இருக்கலாம். ஆனல், புதிய கோவில்களை நாட்டின் எப்பகுதியிலும் கட்ட அனுமதிக்கப்படமாட்டாது. சிங்களம் உண்மையிலேயே தேசிய மொழியாக வேண்டுமானல் ஆங்கிலம் தெரிந்தவர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படக் கூடாது. இன்று பஸ் டிக்கெற்றுகள் தானும் ஆங்கிலத்தில் அச்சிட்டு விற்கப்படுகின்றன. சிங்களவர்கள் தங்கள் மொழிக்காக இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார்கள். ஆனல், இன்று தமிழர்களின்அந்தஸ்து சிங்களவர்களைக்காட்டிலும் உயர்ந்தநிலையில் இருக்கிறது. சிங்கள ஜாதிகசங்கம் தமிழுக்கு உரிய அந்தஸ்து அளிக்கும். ஆனல், இலங்கையில் வசிப்பவர்கள் எல்லோருமே சிங்களம் படித்தாக வேண்டும்."

கனம். பெத்தேகம விமலவன்ச தேரோ

# கண்டதும் கேட்டதும்

### உத்தியோகமொழியின் இலட்சணம்

"இந்த அரசாங்கத்தின் மொழிக் கொள்கை நாட்டுக்கு நாசத்தையே கொண்டுவந்திருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள கச்சேரிகளிலெல்லாம் தமிழில்தான் அலுவல் நடக்கிறது. சிங்களப்பகுதிகளிலுள்ள கச்சேரிகளோ ஆங்கிலத்தில் அலுவல் நடத்துகின்றன. சிங்களம் உத்தியோக மொழியாக இருக்கும்இலட்சணம் இதிலிருந்து புரியவில்லையா?"

திரு. நிமல் கருணதிலக,
மாத்தளை எம். பி.

### மதுபானமும் குதிரைப்பந்தயமும்

"மதுபானத்தைப் பூரணமாகத் தடைசெய்வதும், குதிரைப்பந்தயத்தைத் தடைசெய்வதும் பூரணமாகச் சாத்தியமில்லை. ஆகவே, இவற்றில் மத்திமமான கொள்கையை நாம் கடைப்பிடிக்கவேண்டும். குடிப்பதையோ அல்லது குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுவதையோ நிறுத்தும்படி நான் மக்களைக் கேட்கமாட்டேன். ஆனால், அவற்றில் மிதமாக ஈடுபடும்படியே சொல்லுவேன்."

திரு. எம். டபிள்யு. எவ். அபயக்கோன்,
பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல்.

### தீபேத்துக்கு நேர்ந்த கதிதான்

"இந்தியா நடுநிலைமை வகிக்கும் நாடாகவிருப்பதால் சர்வதேச சமாதானத்தையும், ஸ்திரத்தையும் நிலைநாட்ட முயலுகின்றது. ஆனால், அதிகார வெறிபிடித்த சீனக் கம்யூனிஸ்த படைகள் இந்தியாவிலே படையெடுத்துள்ளன. ஆகையினால், சமாதானத்தைவிரும்பும் இலங்கையிலுள்ள பிரசைகள் இந்நாட்டில் கம்யூனிஸ்த செல்வாக்குப் பலமடையாமல் தடைசெய்வதற்குத் தீவிரபிரசாரம் செய்ய வேண்டும்."

சேர் அல்பேட் பீரிஸ்,
சனப்பிரதிநிதிகள் சபையின்
முன்னுள் சபாநாயகர்.

### ஐ. தே. கட்சியின் சதிவேலை

"யானை அதிர்ஷ்டத்தின் சின்னம். அது பிறருடைய நிர்ப்பந்தமின்றி எவருக்கும் எந்தச் சமயத்திலும் தீங்கிழைக்காது. எனவே, பெரகாரைச் சம்பவம் ஐ. தே. கட்சி "யானை"யினுல் தூண்டிவிடப் பட்டதுதான் என்பதில் சந்தேகமில்லை. கடந்த நூறு ஆண்டுகளிலும் நடந்திராத ஒருசம்பவம் இப்பொழுதுதானு நடக்கவேண்டும்? ஒரு வாரகாலத்துள் மூன்று இடங்களிலே இம்மாதிரியான சம்பவங்கள் நடந்திருப்பதைக்கொண்டே இது ஐ. தே. கட்சியின் சதிவேலைகளில் ஒன்றென்பதைப் புரிந்துகொள்ளலாம்."

திரு. டபிள்யு. தஹநாயக்கா,
கல்வி மந்திரி.

### அவர்களுக்கு நேர்ந்த கதிதான்

"தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலே கம்யூனிஸ்தர்களும், மாக்ஸிய வாதிகளும் செல்வாக்கடைந்து வருகின்றார்கள். இங்குள்ள கம்யூனிஸ்த தலைவர்கள் அடிக்கடி சீனுவுக்கும், ருஷியாவுக்கும் செல்வதானது அவர்களின்செல்வாக்குப் பெருகிவருவதைக் காட்டுகிறது. இந்நாட்டிலே அவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. இந்நாட்டிலே கம்யூனிஸ்தர்களின் செல்வாக்குப் பெருகிவருவதைத் தடைசெய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இந்நாட்டிலே கம்யூனிஸ்தர்களின் செல்வாக்கை அதிகரிக்கவிடின் தீபேத்திய மக்களுக்கு நேர்ந்தகதிதான் எமக்கும்நேரும்."

சேர் அல்பேட் பீரிஸ்,
சனப்பிரதிநிதிகள் சபையின்
முன்னுள் சபாநாயகர்.

### கல்விமந்திரி காரணங் கூறுகிறார்

"கண்டிப் பெரகாரையின்போது நிகழ்ந்த பரிதாபசம்பவம் ஐக்கியதேசிய கட்சியின் தூண்டுதலின்மீது ஏற்பட்டதாகும். தற்போதைய அரசாங்கத்தை மக்கள் வெறுக்கவேண்டும் என்பதற்காகவே ஐ. தே. கட்சி இதைச் செய்தது. இச்சம்பவம்பற்றி விசாரணை செய்யச் சுயேச்சையான கம்மிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்."

திரு. டபிள்யு. தஹநாயக்கா,
கல்விமந்திரி.

### ஆதரவை இழந்த அரசாங்கம்

"தமிழுக்குச் சமஅந்தஸ்துஅளிக்க மறுத்துச் சிங்களத்தைத் தேசிய மொழி ஆக்கியதன்மூலம் தமிழ் பேசும்மக்களின் ஆதரவை இழந்துவிட்ட இந்தஅரசாங்கத்தில் தமிழர்களுக்கு அரசாங்க பதவிகள் கிடைக்குமென்ற எண்ணத்தைக் கைவிட்டுத் தமிழ்ப்பிரதேசங்களில் பொருளாதாரவிருத்திக்காகப் பாடுபடத் தமிழ் பேசும் மக்கள் சங்கற்பம் எடுத்துக்கொள்ளவேண்டும். தமிழுக்குச் சம அந்தஸ்துக் கிடைக்கும்வரை இந்த உறுதியைத் தளரவிடாமல் பின்பற்ற வேண்டும்."

திரு. வி. ஏ. அழகக்கோன்,
மன்னர் எம். பி.

### இப்படிநிகழ்வது இயற்கைதானும்

"கண்டிப்பெரகாரைச் சம்பவத்தில் 15 பேர் உயிர் இழந்தனர். இவர்களில் ஒருவர் யானையின்காலில் சிக்கி மாண்டனர். சனக்கூட்டம் அதிகமாகவுள்ள இடங்களில் இந்தமாதிரியான சம்பவம்நிகழ்வது இயற்கையே. பத்திரிகை ஆசிரியர்களும், கம்யூனிஸ்த கட்சிக்கு வால்பிடிக்கிறவர்களும் என்னைப் பயமுறுத்தி அடக்கிவிட முடியுமென்று கனவுகாணகிறார்கள். இத்தக்கனவு ஒருபோதும் பலிக்காது. அவர்களின் உருட்டுகள், மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சிநடுங்கும் பேர்வழி நான்அல்ல என்பதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்ததேர்தலிலும் காலித் தொகுதியில் நான் போட்டியிட்டு ஐ. தே. கட்சித் திருட்டுயானையை மீண்டும் காட்டுக்குத் தாத்தியடிப்பதில் வெற்றியீட்டுவேன்."

திரு. டபிள்யு. தஹநாயகா,
கல்வி மந்திரி.

### இலகுவான காரியமல்ல

"உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வது இலகுவான காரியம். ஆனால், அந்தத்திட்டத்தை வெற்றிகாமாக நடைமுறைக்குக் கொண்டுவருவது இலகுவானதல்ல. ஆசிரியர்களின் சம்பளங்களை அரசாங்கம்தான்கொடுக்கிறது. ஆனால், உதவிபெறும் சகல பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டால் ஆசிரியர்களின் றெயில்வே வாறன்றுகள், வீட்டுவாடகைகள் போன்றவைகளுக்கு மேலும் மூன்றுகோடி ரூபா செலவிடவேண்டியிருக்கும். கிறீஸ்தவ பாடசாலைகளையிட்டு மக்களிடம் ஒருவிதபீதி காணப்படுவதாகத் தெரிகிறது. அதனால்தான் உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அரசாங்கம் இந்தப்பெரிய பொறுப்பைச் சமாளிக்க முடியாது. உதவிபெறும் பாடசாலைகளை இல்லாமற்செய்ய வேண்டுமானால் அவற்றிற்கு வழங்கப்படும் மானியத்தை நீக்கவேண்டும். அப்போது கட்டணம்வசூலிக்கும் பாடசாலைகள் தோன்றும்."

திரு. சரத் விஜயசிங்கா,
தேசியமய சேவைகள் மந்திரி.

### அரசாங்கத்தின் பாரபட்சம்

"மிகவும் வரண்ட பிரதேசமாகிய மன்னர்ப்பகுதியில் 80 சதவிகிதமான மக்கள் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு சீவனம் நடத்திவருகிறார்கள். முற்றிலும் விவசாயப் பிரதேசமான இப்பகுதிக்குத் தேவையான அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டிவருகிறது. அதேசமயத்தில் பெரும்பட்டினங்களை அபிவிருத்திசெய்ய லட்சக்கணக்கான ரூபாக்கள் செலவிடப்படுகின்றன. ஒருநாட்டின் முன்னேற்றம் கிராமங்களின் முன்னேற்றத்தில்தான் தங்கியுள்ளது என்பதை அரசாங்கம் இன்னும் உணராமல் இருப்பது ஏனோ தெரியவில்லை. விவசாய, கால்நடை விருத்திக்காகப் பிறநாடுகளிலிருந்து இலவசமாகக்கிடைக்கும் பலஉதவிகள் தானும் தமிழ்ப்பகுதிக்கு — குறிப்பாக வறிய விவசாயிகளைக்கொண்ட பகுதிகளுக்குத் தருவதில் பாகுபாடு காட்டப்பட்டுப் பணம்படைத்தவர்கள் வசிக்கும் தென்பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன."

திரு. வி. ஏ. அழகக்கோன்,
மன்னர் எம். பி.

### வாளை உபயோகிப்பார்களா?

"சமசமாஜகட்சி ஆட்சிக்குவந்தால் சிங்களகலாசாரம் மீண்டும் அழிந்துபோகும். ஐக்கியதேசிய கட்சிக்காரர், தமிழர், கத்தோலிக்கர், அமெரிக்கர் ஆகிய அனைவரும் சிங்கள கலாசாரத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். சிங்களப் புராதன கலாசாரத்தைப் பாதுகாப்பதற்குப் பழங்கால அரசர்களைப்போல் இப்போது வாளை உபயோகிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்."

திரு. எஸ். டி. பண்டாரநாயகா,
கம்பஹா எம். பி.

# வியாகுலத் தாய்

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

உள்ளத்திலும் விழுந்து தைப் புடைத்தன. அந்தக்கொடூர ஆணிகள் ஆண்டவரின் மேனியைமட்டுமல்ல, வியாகுலத்தாயின் இதயத்தையும் துளைத்துச்சென்றன.

அவளது தாய்மைஉணர்வெல்லாம் துடியாய்த் துடிக்க, அழக்கூடச் சக்தியற்றநிலையில், எல்லை மீறியதுயரத்தால் வாயடைத்து, நெஞ்சம்பதறிக் குலைநடுங்கி நிற்கும் தாயின்சோகநிலையை மௌனதியானம் ஒன்றுதான் நன்குஉணர்த்தமுடியும்.

ஒவ்வொருவினடியும் ஒருயுகமாகக் கழிந்தது. கடைசியாக, "யேசுநாதர் பேரொலியாய்க் கூப்பிட்டு உயிர்விட்டார்" (மாற். 15-37). மரித்த ஆண்டவரின் திருவுடலைச் சிலுவையிலிருந்து இறக்கினர்கள். துயரின்உச்சத்திலிருந்து தளர்ந்துஅமர்ந்திருந்த தாயின்வேதனைபுதுவேகத்துடன் மீண்டது. குழந்தையேசுவை மடியில்தவழவிட்டு மகிழ்ந்த அன்னை இதோ, இப்போது மரித்தசடலத்தை மடியிலிட்டுப் புலம்புகிறுள். திருக்காயங்களைத் தமதுமலர்க்கரத்தாலும், துணிகளாலும் துடைக்கிறுள். நொந்து, அறுந்து, கிழிபட்டு, துவண்டுவிழும் உடலைப்பார்த்துப்பார்த்து அங்கலாய்க்கிறுள்......

எவ்வளவுநேரம் இப்படிப் புலம்பிக்கொண்டிருப்பது? அந்திசாயும்நேரம். தூயதுகிலில் ஆண்டவரின் சடலத்தைப் பொதிந்து, கல்லறையினுள் வைக்கின்றனர். மரித்தஉடலானுலும் அவளது மைந்தனின் உடல் அல்லவா? அந்தஉடலும் மறைவதுஎன்றுல் தாயின் துயரம் பீறிட்டெழுந்ததில் வியப்பென்ன? "ஐயோ, மகனே!" என்ற அலறலுடன் மயக்கமுற்றுச்சாய்கிறுள். ஏழாவதுவாள் அவளது இதயத்தை ஊடுருவிச்சென்றது.

துன்பப்படுவோரிடம் அனுதாபம்கொண்டு இதமானமொழிகளாலும், பக்குவமான செயல்களாலும் துயரைத்தணிப்பது தான் மனிதப்பண்பு. துயருறும் தேவதாயிடம் நாமும் அனுதாபம் காட்டுவோம்.

அவளிடம்பொங்கியெழும் வியாகுலத்தில் நாமும் பங்குகேட்போம். அதேநேரத்தில் வியாகுல அன்னையிடம் ஒருபெரும்பாடத்தையும் கற்றுக்கொள்வோம். நம் அனைவருக்கும் துன்பதுரிதங்கள் வருவதுஇயல்பே. இன்னல்கள் பாவப்பரிகாரமாக உதவுகின்றன. இறைவனைவிட்டுஅகன்று உலகப்பகட்டுவழிகளில் மதியிழந்து அருள்வாழ்க்கையை இழக்கும் அதர்மர்களை இறைவனிடம் திருப்பிஇழுக்கும் தூண்டிலாக இன்னல்கள் பயன்படுகின்றன. இவ்வுலகம் சதமல்ல, உண்மை இன்பத்தை அளிக்க அதனுல் இயலாது, வான்வீடே நமது உண்மைவீடு என்ற அடிப்படை உண்மையைத் துன்பங்கள் உணர்த்துகின்றன. எத்தனையோ பாவிகள் தங்களுக்குநேரிட்ட பேரிடரின்காரணமாக, புத்தித் தெளிவடைந்து நன்னெறிக்குத் திரும்பியுள்ளனர். இக்காரணங்களினுல் இறைவன் நமக்குப்பல விதத் துன்பங்களை அனுப்புவதுண்டு, அனுமதிப்பதுண்டு.

பரலோகபூலோக அரசி வியாகுலங்களை அனுபவித்ததினுல் அவளதுதெய்வஅன்பும், புண்ணியப்பண்பும் மிளிர்ந்தொளிர வாய்ப்புஏற்பட்டது, பத்தரை மாற்றுத்தங்கம் நெருப்பில்தானே ஒளிவீசுகிறது. இறையன்பர்களும் இன்னல்கள்மத்தியில் தான் தங்கள்கடவுட்பாசத்தை நிருபிக்கின்றனர். அதைஅதிகரிக்கச்செய்கின்றன.

"அன்பும்நேசமும் எங்குஉண்டோ, அங்குதெய்வம் உண்டு." நமதுதெய்வம் சிலுவையில் தொங்கிய அன்புத்தெய்வம். "என்பிறகேவரமனதாயிருப்பவன் தன்சிலுவையைச் சுமந்துவரட்டும்!" என்றுகூறியதெய்வம. "கோதுமைமணி நிலத்தில் விழுந்து மடிந்தாலொழிய, நூறுமடங்கு பலனைத்தராது" என எச்சரித்ததெய்வம். ஆதலின் "பெண்களில்பாக்கியவதி" யான மரியன்னை வியாகுலம்நிறைந்த துயரத்தாயாகவும் விளங்கியதில் வியப்பில்லையல்லவா?

பரிசுத்த வியாகுலஅன்னையின் திருநாள் இம்மாதம் 15-ந்திகதி செவ்வாய்க்கிழமை திருச்சபையாலே கொண்டாடப்படுகிறது.

# பகையை வென்ற பரமண்டல மந்திரம்

பகலவன் தன்பாந்தகதிர்களைக் கருநீலக்கடலில் பதித்துநின்ற காட்சியைப் பார்த்துப் பரவசமடைந்தேன். மானிலத்தைவிட்டு மறையவேண்டிய நேரம் வந்துவிட்டபடியால் அவன் நீலக்கடலுக்கு விடைகூறித் தனது நீண்ட கதிர்களைக் கொஞ்சமகொஞ்சமாக மறைத்துப் பலவர்ணங்களை வாரியிறைத்தான். கூட்டைவிட்டுக் கூட்டங்கூட்டமாகப் பறந்துசென்ற பட்சிகளையும், கடல் கொந்தளித்துக் கதிரவனுக்கு விடைகூறும் காட்சியையும் கண்டதே ஏதோ கனவுலகில் சஞ்சரிப்பதாக உணர்ந்தேன்.

"டேய் ஜெயம்!" என்ற சிற்றன்னை சித்தியின் சீற்றக்குரல்கேட்டுக் கனவுலகிலிருந்து விடுபட்டேன். நான்வருமட்டும் சேவியரைக் கவனமாகப் பார்த்துக்கொள் என்று கூறிவிட்டுச் சிற்றன்னை அப்பால் அகன்ருு. வீட்டில்தான் சுதந்திரம் இல்லை என்ருல் இயற்கை தரும் இன்பக் காட்சியைக் கண்டு இன்புறுவதற்கும் சுதந்திரம் இல்லையா? என்றெண்ணி ஒருபெருமூச்சு விட்டேன். சேவியர் தனக்குச் சிறியமணற்கோட்டை கட்டித்தரும்படி கேட்டதால் மணலினுல் ஓர்மண் கோட்டையைக் கட்டினேன். அது மனிதர்கட்டும் மனக்கோட்டைபோல் வானளாவ உயர்ந்துசென்றும் அஸ்திவாரம் இல்லாததால் அலங்கோலமாக விழுந்துதகர்ந்தது. கோட்டைதகர்ந்ததைக்கண்ட சேவியர் 'கோ' என்று அழத்தொடங்கினுன். அவன் அழுவதைக்கண்ட சிற்றன்னை "ஏன்டா அவனை அழவைத்தாய்" என்று கூறி நான்குவிரல்கள் பதியும்படி என்முதுகில் நான்குஅறைகள் அறைந்தா

வஞ்சம், சூது, கள்ளம், கபடம், காய்மகாரம் நிறைந்த இந்தக்கொடிய உலகைவிட்டு அந்தக் கொந்தளிக்கும் கடலில் குதிக்கவேண்டும்போல் இருந்தது எனக்கு. கடற்கரையிலிருந்து வீடுதிரும்பும்போது வழியில்இருந்த கோவிலுக்குச்சென்று அங்கே அகதிகளுக்கு ஆதரவாய், தவித்தோருக்குத் தஞ்சமாய், திக்கற்றவர்களுக்குத் திசைகாட்டியாய் விளங்கும் என்தாயிலும் மேலாகிய தேவதாயாரிடம் சென்று என் நெஞ்சில்உள்ள குறையைக்கூறிக் கண்ணீரால் அவபாதங்களைக் கழுவினேன். வீடுதிரும்பியபோது சிற்றன்னை சிங்கம்போல் சீறிவிழுந்தா. என்னுடன் துணைக்குவராமல் எங்கடா சென்றுவருகிருய்? என்றுகூறி முன்பு பதியாமல்இருந்த ஒருவிரலையும் என் முதுகில் பதித்தா. அன்றிரவு எனக்கு அன்னமும் அளிக்கவில்லை. இவைகளால் சிற்றன்னை சித்தியின்மேல் எனக்குப் பகையோடுகூடிய வைராக்கியம் என்நெஞ்சில் பதிந்ததில் ஆச்சரியமில்லை. அதனுல் கடவுளைக்கையெடுத்தேன். என்கண்முன்பாகச் சித்திக்கு ஒருகொடியநோயை வரவிடும்படி அவரைவேண்டினேன். சிற்றன்னை சித்தியின் உபத்திரவம் உயர உயரச் சித்திக்குக் கொடியநோய் வரும்படி மன்ருடுவதை விடுத்துச் சித்தியின் உயிரை எடுத்துச்கொள்ள வேண்டுமென்று மன்ருடிவரலானேன்.

கடந்தகாலத்தை என்கண்முன் நிறுத்தினேன். எனதுதாயார் மனேன்மணி இம்மண்ணுலகிலிருந்து மறைந்ததால் அல்லவோ இந்த மீளாத்துயர் எல்லாம். தகப்பனுராவது இருக்கிருர் என்று தேறியிருந்த எனக்குச் சிற்றன்னைஎன்ற சிங்கத்தைக் காவலாக வைத்துவிட்டுச் சென்ருரே. சேவியர் என்றசேய் இத்தரணியில தவழுமுன் சித்திக்குச் சருக்கரைப்பாகுபோல் சுவைத்தநான் அவன்பிறந்தபின் புளியங்கோதுபோல் வேருக, வேப்பங்காய்போல் கசக்க நான்செய்த பிழைதான் என்ன? என்னை வேருக்குவதற்குக் காலாயிருந்த சேவியர்மேல் எனக்குக் கோபம்கோபமாய் வந்தது. முந்தியகதியை எண்ணிப்பார்த்துத்தான் என்னபயன் அடையப்போகிறேன்,

காலதேவன் தன்கருமத்தைக் காற்றைப்போல் கடிதாக்கி இரண்டுமாதங்கள் அடைந்தான். அந்த இரண்டு மாதங்களிலும் சித்தி எனக்கிழைக்காத தீங்குமில்லை. என்னில் கண்டுபிடிக்காத குறையுமில்லை என்றுகூறலாம். அந்த இரண்டுமாதமும் சித்தியை இவ்வுலகத்தில்இருந்து எடுத்துக்கொள்ளும் என்று கடவுளிடம் நான் மன்ருடாத நாளுமில்லை என்றே கூறவேண்டும்.

ஒருநாள் சிறியசுரம்என்று படுத்த சிற்றன்னை பலவாரங்கள்சென்றும் எடுக்கையைவிட்டு எழுந்திருக்காததால் பன்மன்ருட்டுப் பலனளித்து விட்டதென்று பரவசப்பட்டேன். கூட்டில் அடைத்திருந்த கிளியைக் கூட்டிலிருந்து விடுவித்தால் எவ்வளவு குதூகலப்படுமோ அதிலும்மேலாகச் சித்தியின் வருத்தத்தையிட்டு அக்களிப்படைந்தேன். வரவர வருத்தம்கூடி ஓர்மயக்கத்தில் கொண்டுபோய்விட்டது. இப்படியாகவந்த மயக்கம் ஒருநாள் பலமணிநேரங்களாகியும் தெளியவேயில்லை. மயக்கம் நீங்காததுகண்ட மாமா அவசரமாக வைத்தியரை அழைத்துவரும்படி என்னைஅனுப்பினுர். பழிவாங்குவதற்கேற்ற சமயம் இதுதான் என்றெண்ணி வைத்தியர் வீடுநோக்கிச் செல்லாது கோயிலை நோக்கிச் செல்லலானேன்.

நான்செய்யும்பழியை எண்ணியதும் எங்கால்கள் பதறின. சேவியர் அன்னையில்லாது அழுதுபுலம்பும் காட்சியைக் காண்பதுபோலிருந்தாலும் எனது கல்மனம் கரையவில்லை. சித்தியைச் சீக்கிரம் எடுக்கும்படி பரமண்டலமந்திரத்தைச் சொன்னேன். பரமண்டல மந்திரத்தின் இரண்டாம்பகுதியில் "எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே எங்கள்கடன்களை எங்களுக்குப்பொறும்" என்னும் வாக்கியங்கள் என்கவனத்தைக் கவர்ந்தன. அதைப் பலமுறை உச்சரிக்கலானேன். அதைஉச்சரிக்க உச்சரிக்க நான்செய்வது எவ்வளவு பாரதூரப்பட்ட தவறென்று விளங்கியது. இவ்வளவுகாலமும் நாங்கள்செய்யும் பாவங்களை மன்னிக்கும்படி மன்ருடி அதற்காகநாங்கள் பிறர்குற்றங்களை மன்னிப்போம் என்று வாயளவில் மாத்திரம் வாக்குக்கொடுத்து இவ்வளவுகாலமும் கடவுளைஏமாற்றி வந்திருக்கிருேம் என்றுநினைக்கவே பயமாயிருந்தது. எனதுபாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமாயிருந்தால் நான் சித்திசெய்த குற்றங்களை மன்னிக்கத்தானே வேண்டும். அப்படிச்செய்யாமல் கடவுளை ஏமாற்றுவதா?

சிந்திக்கநேரமின்றி வைத்தியர் வீட்டைநோக்கிச்சிட்டாய்ப்பறந்தேன். அப்படிச்சென்றுகொண்டே வைத்தியரும் வீட்டில்இருக்க வேண்டுமென்று கடவுளைவேண்டினேன். நான் வைத்தியர்வீட்டை அடைவதற்கும் வைத்தியர்வண்டியிலேறுவதற்கும் சரியாயிருந்தது. மூச்சைப்பிடித் தோடிப்போய் வைத்தியரிடம் சித்தியின் நிலைமையைக் கூறி அழைத்துவந்தேன். அவர் சோதித்துப் பார்த்துவிட்டு அவசரம் அவசரமாக ஓர்ஊசியை ஏற்றியபின் பயப்படுவதற்கு ஒன்றுமில்லைஎன்றும், சற்றுத் தாமதித்திருந்தால் மயக்கம் மரணத்தைவிளைத்திருக்கும்என்றும் கூறிச்சென்ருர். வைத்தியர் வீடுசென்றதும் சிற்றன்னை சித்தி கண்விழித்தாள். நான்செய்த கொடுமைகளைக் கூறி அவள்காலில்விழுந்து மன்னிப்புக் கேட்டேன். உன்னை நான் மன்னிக்கப்படாது, நீயேஎன்னை மன்னிக்கவேண்டுமென்றும், நான்செய்த கொடுமைகளாலேயே நீஇப்படிச் செய்தாய்; நான்செய்த கொடுமைகளுக்கே இப்போது அனுபவிக்கிறேன்; நானொருபோதும இனிமேல்உனக்குத் தீங்குசெய்பவில்லை என்று கண்ணீர் விட்டா. சேவியரையும் அழைத்துக்கொண்டு கோயில்சென்று மன்ருடினேன். சித்தி மறையுமபடி அல்ல, அவவருத்தம் மறையும்படி. வருத்தம் சீக்கரம் குணமாகியதென்று சொல்லவும் வேண்டுமா?

சகோதரர்களே! உங்களில் எத்தனைபேர் உங்கள்விரோதிகளுக்காக மன்ருடுகிறீர்கள்? அவர்கள் நல்வழியில் நடக்கவேண்டுமென்று வேண்டுவது எத்தனைபேர்? பரமண்டலத்தில் கொடுக்கும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுபவர்கள் எத்தனைபேர்? யேசுநாதர் மலைப்பிரசங்கத்தில் "உங்களைப்பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்கள் பேரில் அபாண்டஞ் சொல்லுகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; இவ்விதம்செய்தால் நல்லோர்மேலும், தீயோர்மேலும் தமதுசூரியனுதிக்கவும், நீதிமான்கள்மேலும் அநீதர்கள் மேலும் மழைவருவிக்கவும் செய்கிற பரலோகத்தில்உள்ள உங்கள்பிதாவுக்கேற்ற பிள்ளைகளாயிருப்பீர்கள்" (மத். VI. 2—3) என்றுகூறும் வாக்கியங்களைக் கேட்டுநடந்தால் நீங்கள் மோட்சபேரின்பபாக்கியத்தைத் தப்பாமல் அடைந்துகொள்வீர்கள் என்பதற்கையமில்லை.

**S. A. திருச்செல்வம்**
அர்ச். என்றியாசர் கல்லூரி,
இளவாலை.

---

## மட்டக்களப்பு குருத்துவ வெள்ளியூபிலி விழா

### புளியந்தீவு

புளியந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புளியந்தீவுப் பங்குக்குருவருமான வண. என்றி பொன்னையாசுவாமிபவர்களின் குருத்துவ 25 வருடநிறைவு வெள்ளியூபிலிவிழா சென்ற 26-8-59 வெள்ளிக்கிழமை அதிகம்சிறப்பாக அவரின்உறவினரால் கொண்டாடப்பட்டது.

அன்றுகாலை 7மணிக்குச் சிங்காரமுற்றுவிளங்கிய தமது மனையிலிருந்து வாத்தியவரிசைகளுடன் அவர் ஊர்வலமாக அர்ச். மரியநாயகி ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே மகாவந். திருகோணமலை மேற்றிராணியாண்டவரவர்கள்சமுகந்தா, வண. ஆட்ரேு, வண. அன்ரனிஆகிய இருகுரவர்களும் துணைபுரிய யூபிலிநாயகர் தமது யூபிலித்தோத்திர பாடற்பூசைநிறைவேற்றித் "தெதேயும்" என்ற தேவதோத்திர பாடலைப்பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்அருளினுர். யூபிலிப்பூசையில் எல்லோருமே சைவசமயத்தினரான யூபிலிநாயகரின் உறவினர்கள்யாவரும பங்குபற்றினர். பூசையின்பின் பங்குக்கிறீஸ்தவர்கள் சுவாமியாரைச்சந்தித்துத் தங்கள்சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். அதன்பின் உறவினர்சகிதம் அவர் பிரதிமைப்படம் பிடிக்கப்பெற்ருர்.

பிற்பகல் 5மணிக்கு யூபிலிநாயகரைக் கௌரவிக்குமுகமாக நகரசபைத்தலைவர் திரு. ஏ. எஸ், ரி. கனகசபை அவர்கள்தலைமையில் ஒருதோட்டவிருந்து உபசரணை நடைபெற்றது. அவ்வமயம் மட்டக்களப்புப் பாராளுமன்றஅங்கத்தவர் திரு. எஸ். இராசதுரை, திருகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்கதலைவர் திரு. டேவிற், ஆசிரியர் நாகையா, ஆசிரியர் பிரான்சீஸ், வித்துவான் கமலநாதன்ஆகியோர் யூபிலிநாயகரின் வாழ்க்கைவரலாறுகளையும், தொண்டுகளையும்கூறி அவரைப் பாராட்டினுர்கள்.

தமக்குஅளிக்கப்பட்ட உபசாரத்திற்கு யூபிலிநாயகர் நன்றிகூறிப்பேசுகையில், தாம்எவ்வாறு கத்தோலிக்க சமயத்தைத் தழுவினுர்என்பதையும், தமக்குத் தேவஅழைத்தல் எவ்வாறு கிடைத்ததுஎன்பதையும் அருட்சிததும்ப எடுத்துக்கூறினுர். தம்மைக் குருவாக்கிய காலஞ்சென்ற வண. ஆறிச் சுவாமியாருக்குத் தாம் என்றென்றும் நன்றியறிதல் உள்ளவராய் இருப்பதாகவும், தமிழ்ப்பாஷையைக் கற்கத் தமக்குச் சந்தர்ப்பமளித்த மகாவந். இக்னேசியஸ் கிளெனி ஆண்டவரவர்களுக்குத் தாம் கடமைப்பட்டவராய் இருப்பதாகவும் கூறினுர்.

உற்சாகமிகுந்தவரும், தணியாத ஆத்துமஇரட்சணிய ஆவலுள்ளவரும், சிறந்த பிரசங்கியாருமான சுவாமிகளை இப்பங்குபெற்றிருப்பதுபங்குக்கிறீஸ்தவர்களின் அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். செபம், தியாகம், வேதசத்தியங்கள் ஆதியபற்றிச் சிறந்தநடையில் போதிப்பதோடுமாத்திரம் நின்றுவிடாது, சாதனையிலும்காட்டும் செயற்திறன்நிரம்பிய ஞானவீரரென்றே இவரைக்கூறவேண்டும். இவருடைய வேலைத்திறனுக்கு இப்பங்குக்கத்தோலிக்கமக்கள் வேதஅனுஷ்டானங்களிற் காட்டும்ஊக்கமே உரைகல்லாகும். யூபிலிநாயகர் பல்லாண்டுகள்வாழ்ந்து மக்களுக்கு இன்னும் அதிகம்பணிபுரிய இறைவன் திருவருள்புரிவதாக.

(பாடசாலைகள் விடுமுறைகாரணமாக மூடப்பட்டிருப்பதால் புரட்டாசி 7-ந் திகதி யூபிலிக்கொண்டாட்டம் திரும்பவும் தொடர்ந்து நடைபெறும்.)

பங்குக்கத்தோலிக்கன்.

---

● இங்கிலாந்திலே சசெக்ஸ்மாகாணத்தைச்சேர்ந்த அருண்டெல் எனுமிடத்தின் மூன்னுள் அங்கிளிக்கன் சபைப் பாதிரியாரான கனம். ஹென்றி கிங்அவர்கள் மனந்திரும்பி லண்டன் நகர் வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவிலிலே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்ருர். இவர் சென்ற வைகாசிமாதம் தமது "உயர்தரசபை"யின் ஆராதனைகள்பற்றி முறையீடுகள் செய்தபின் தம்முடையபதவியை இராசிநாமாச் செய்யலாயினர். எலிசபேத் மகாராணியாரும், அவர்நாயகரான பிலிப்இளவரசரும் இவர்நடத்திய ஆராதனைக்குச் சமுகமளித்திருக்கின்ருர்கள்.



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

நாம் தினந்தோறும் மரியாயின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு வரவேண்டும் இவ்வாறு உச்சரிப்பதால் பாவச்சமயத்தையும், சோதனையையும் ஜெயிக்கலாம். மரியென்னும் திருநாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் பசாசும், பாதாளமும் நடுங்கும். அர்ச். விறிசித்தம்மாளுக்கு வெளிப்படுத்திய பிரகாரம் மரியென்னும் திருநாமத்தைக் கேட்டதும் பேயினங்கள் பயமடைந்து ஆத்துமத்தை விட்டு விலகுகின்றன. தேவஅன்னையின் பெயரைப் பக்தியோடு உச்சரித்து வரும் தாசர்கள் அடைந்துவரும் ஆத்துமசரீரநன்மைகளுக்குக் கணக்கில்லை. எங்கு மரியாயின் நாமம் உச்சரிக்கப்படுகின்றதோ அங்கு பசாசுகள் துரத்தப்படுகின்றன. குற்றவாளிகளுக்கு மன்னிப்பும், நோயாளிகளுக்கு ஆரோக்கியமும், கோழைமன துள்ளோர்க்குத் தைரியமும், துன்பப்படுவோர்க்கு ஆறுதலும், துணையும் அளிக்கப்படுகின்றது. பாவிகளுக்கு அடைக்கலமும், நமது சந்தோஷத்தின் காரணமுமாகிய தேவஅன்னையை நாம் நமது மாதாவாகவும், ஆண்டவளாகவும் தெரிந்துகொண்டு, அவளுடைய நாமத்தைப் பக்தி பற்றுதலுடன் உச்சரித்து, அவளுடையவல்லபத்தில் விசேஷ நம்பிக்கையும் வைக்கவேண்டும். மரியென்னும் திருநாமம் நமது கேடயமாகவும், மோட்ச வழிகாட்டியாகவும் இருப்பதாக!

அண்ணு

## எழுதி அனுப்புங்கள்

வாசக நேயர்களே!

இன்றுவரை "காவலன்" உங்கள் ஆவலை – தேவைகளை இயன்றமட்டும் பூர்த்திசெய்து, புனித சேவை ஆற்றியுள்ளான். இன்னும் உயர்ந்த நிலையில் அவன் தொண்டுபுரிதற் குதவியாக உங்கள் உள்ளத்தில் உதிக்கும் நல்லெண்ணங்களையும், ஆலோசனைகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள். மகிழ்ச்சியுடன் வரவேற்போம்!

அதிபர்,
சஞ்சூசை மாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## என்ன சொல்லுது?

— "ஜெயம்" —

"கா" "கா" என்று கரையும் காகம் என்ன சொல்லுது?
காலை நேரம் எழும்ப வேண்டும் என்று சொல்லுது.

ஆகாயத்தில் பருந்து நின்று என்ன சொல்லுது?
அறிவில் வளர்ந்து உயர வேண்டும் என்று சொல்லுது.

"கூ" "கூ" என்று குயிலும் தொனியில் என்ன சொல்லுது?
கொஞ்சுந் தமிழிற் பாட்டுப்பாடு என்று சொல்லுது.

"கீ" "கீ" என்று பச்சைக்கிளியும் என்ன சொல்லுது?
கேள்விஞானம் பெற்றுவாழு என்று சொல்லுது.

"ஊ" "ஊ" என்று ஊதும் வண்டு என்ன சொல்லுது?
உலகிற் கல்விச் செல்வந் தேடு என்று சொல்லுது.

"சோ" "சோ" என்று அருவிபாடி என்ன சொல்லுது?
சுதந்திரத்தைப் போற்றவேண்டும் என்று சொல்லுது.

## வேதசாட்சியான அர்ச். லவுறேஞ்சியார்

கி. பி 258-ம் ஆண்டு றோமாபுரியிலே தேவாராதனைவேளையில் பரிசுத்த பாப்பரசருக்குப் பரிசாரகராகத் திருஊழியம் புரிந்து, ஏழைகளுக்குத் தானதருமம்பகிர்ந்துகொடுத்து வந்த ஏழு தியாக்கோன்மாருள் லவுறேஞ்சியாரும் ஒருவர். அக்காலத்தில் உண்டான வேதகலாபனையில் அநேக குருமாரும், கிறீஸ்தவர்களும் வேதவிரோதிகளால் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிக்ஸ்துஸ் பாப்பானவரையும் சேவகர் பிடித்துக்கொண்டு போவதைக் கண்ட லவுறேஞ்சியார் அவரைப் பார்த்து: "பிரிய தந்தையே! என்னை விட்டு விட்டுத் தேவரீர்மாத்திரம் போவது தர்மமோ? நான் தங்களுக்கு என்ன தப்பிதஞ் செய்தேன்?" என்று அழுகையுடன் சொன்னுர் அதற்குப் பாப்பானவர்: "மகனே! தைரியமாய் இரு; இன்னும் மூன்று நாட்களில் நீயும் என்னைப் பின்செல்வாய்" என்று சொல்லிப் போயினுர்.

பின்னர் அதிபதி லவுறேஞ்சியாரை வரவழைத்து, அவர்வசமுள்ள கோவில் ஆஸ்திபாஸ்திகளையெல்லாம் மூன்று தினத்திற்குள் தன்னிடம் கொண்டுவந்து கையளிக்க வேண்டுமென்று கற்பித்தான். அவரோ கோவிற் திரவியங்களை எல்லாம் குருடர், செவிடர், சப்பாணிகள் முதலாம் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, மூன்றும் நாள் அவர்களை ஓர்கும்பலாகச் சேர்த்துக் கொண்டுபோய் அதிபதியைப் பார்த்து: "இவர்கள்தான் நீர் கேட்ட விலையுயர்ந்த திரவியங்கள்" என்றுர். அதிபதி இதைக் கேட்டதே கோபவெறிகொண்டவனுய் லவுறேஞ்சியாரைப் பிடித்து இரும்புக் கட்டிலில் கிடத்தி அதன்கீழ் தீமூட்டிவிடும்படி ஆஞ்ஞாபித்தான்.

வேதசாட்சியோவெனில், சுவாலித்து எரியும் தீயின் அனலைப் பொறுத்துக்கொண்டு யேசுக்கிறீஸ்துநாதரைப் புகழ்ந்து தோத்திரித்துக்கொண்டிருந்தார். அந்நேரத்தில் அவரது சிரசின்மேல் அதிசய பிரகாசம் ஒன்று ஜொலிப்பதை அங்கு சமுகமாயிருந்த கிறீஸ்தவர்கள் கண்டு ஆனந்தித்துத் தாங்களும் அவரோடு சர்வேசுரனைத் தோத்திரித்தார்கள். அப்போது வேதசாட்சி அதிபதியை நோக்கி: "என்சரீரம் நன்றாய் வெந்துவிட்டது; இப்போது அதனைச்சாப்பிடு" என்று சொல்லி உயிர்துறந்து வேதசாட்சி முடிபெற்றுர். இவர் திரு




நாளை வருடந்தோறும் திருச்சபை ஆவணிமாதம் 10-ந் திகதி கொண்டாடிவருகிறது. நாமும் நமது இருதயத்தில் எழும்பும் அசாபாசங்களை ஒறுத்தல் எனும் அக்கினியால் தகித்துச் சர்வேசுரனுக்குத் தகனப்பலி இடுவோமாக!

நிற்க, யாழ்ப்பாணக் குடாநாட்டிலே அர்ச். லவுறேஞ்சியார் பேரால் நெடுந்தீவிலே ஓர் கோவில் இருந்து வருகிறது. இது நாவிதர்களுக்குரியது. பழங்கால மாதிரியான இக்கோவில் 1902-ம் ஆண்டு பூச்சுவேலை செய்து புதுப்பிக்கப்படலாயிற்று. சனங்கள் ஓர் பாரம்பரிய சம்பவத்துடன் இந்தக்கோவிலைச் சம்பந்தப்படுத்திச் சொல்லிவருகின்றுர்கள். ஓர் போர்த்துக்கேய மாலுமி ஓர் முறை கடல் அபாயத்துக்குத் தப்பி அங்கு கரைசேர்ந்ததாகவும், அதற்குத் தோத்திரமாக அந்த மாலுமி அங்கு ஓர் சிலுவையை நாட்டியதாகவும் சொல்லப்படுவதே அப்பாரம்பரிய சம்பவமாகும். போர்த்துக்கேயரால் கொழும்புநகரின் பாதுகாவலராகத் தெரியப்பெற்றவரும் அர்ச். லவுறேஞ்சியாரே.

## உங்களுக்குத் தெரியுமா?

By Scio







(1) உலகில் இதுவரை எக்காலத்திலாவது செய்யப்படாத மாபெரும் தூரதிருஷ்டிக்கண்ணுடி, கலிபோணியாவிலே பலோமார்குன்றின்மீதுள்ள ஹேல்ஸ்ரீ திவிம்பக் கண்ணுடியேயாகும். இதன் பிரதமகண்ணுடி 125அங்குல அகலமும், 14½தொன் நிறையுமுள்ளது. இந்தப்பிரமாண்டமான தூரதிருஷ்டிக்கருவி சந்திரனைப் பூமியிலிருந்து சரியாய் எட்டுமைல்தூரத்தில் தோற்றும்படி செய்யக்கூடியது.

(2) தும்பிகள் தங்கள் சொந்தநிறையிலும் இருமடங்குக்குமேற்பட்ட குதிரைகுத்திகளை இருமணி நேரத்தில் உண்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. வழமையிலே நம்பப்படுவதுபோலத் தும்பிகள் மனிதருக்குத் தீமைசெய்வனவல்ல.

(3) உலகில் தானிய உற்பத்திப்பொருட்களை மிகப்பெருந்தொகையாக உண்பவர்கள் தெற்கு றுடேசிய நாட்டு மக்களேயாம். கலம்பியநாட்டுமக்கள் மிகப்பெருந்தொகையாகச் சீனிஅருந்துபவர்கள். ஐஸ்லாந்துமக்கள் பெருந்தொகையாகப் பாலும், உறுக்குவேநாட்டுமக்கள் பெருந்தொகையாக மாமிசமும் அருந்துகிறுர்கள்.

# சுதேச வர்த்தமானம்

## பட்டினசபையும் தமிழ்நிர்வாகமும்

தனித்தமிழ்மக்கள்வாழும் ஊர்காவற்றுறையிலே பட்டினசபையின் சகல நிர்வாகஅலுவல்களும் தமிழில்நடைபெற வேண்டுமென்ற பிரேரணையொன்று அப்பட்டினசபையின் மாதாந்தகூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது. இந்தப்பிரேரணையை எடுத்தாண்ட திரு. பி. இம்மனுவேல்அவர்கள் பேசியபோது, "எல்லாம்தமிழில்" என்றகொள்கைக்கேற்பப் பட்டினசபையின் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்று மக்கள்விரும்புவதாகத் தெரிவித்தார். 1960-ம்ஆண்டிலிருந்து தமிழ்இலக்கத்தகடுகளை வழங்குவதென்றும் சபை தீர்மானித்துள்ளது.

## லொறிமூலம் குடிதண்ணீர்

ஊர்காவற்றுறைப் பட்டினசபைப் பகுதியிலே நிலவும் தண்ணீர்ப்பஞ்சத்தை நீக்கும்பொருட்டு லொறிமூலம் குடிதண்ணீர் வழங்குவதைப் பட்டினசபைமேற்கொண்டுள்ளது. தீவுப்பகுதிப்பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா அவர்களும், பட்டினசபைத்தலைவர் திரு. எஸ். தேவசகாயம்அவர்களும் எடுத்துக்கொண்ட தீவிரமுயற்சியின் பயனாகவே தற்போதுஅங்கு லொறிமூலம்குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

## கடற்தொழிலாளரும் கடன்பணமும்

யந்திரப்படகுகள் வாங்குவதற்காகக் கடற்தொழிலாளருக்குக் கடன்பணம் கொடுப்பதைக் கடற்தொழிற்பகுதி சென்ற சனிக்கிழமைமுதல் நிறுத்திக்கொண்டது. இனிமேல் கூட்டுறவு மீன்பிடிசங்கங்களுக்குஅல்லாது தனிப்பட்டவர்களுக்குக் கடன்கொடுப்பதில்லை என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகும். கூட்டுறவு மீன்பிடி சங்கங்களுக்குக் கடன் தொடர்ந்து கொடுக்கப்படும்.

## ஆஸ்திரேலியமாணவர் கிறிக்கெற்கோஷ்டி

இலங்கையிலே வருகிறதைமாதம் சுற்றுப்பிரயாணஞ் செய்வதற்கென்று வரவிருக்கும் ஆஸ்திரேலியமாணவர் கிறிக்கெற்கோஷ்டி யாழ்ப்பாணமாணவர் கிறிக்கெற்கோஷ்டி ஒன்றுடன் போட்டியிடவிருக்கிறது. அதற்கான ஒழுங்குகள் தற்போது செய்யப்பட்டிருக்கின்றன. 1960-ம்ஆண்டு ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த அடெலெயிட்நகர மாணவர்கோஷ்டிஒன்று யாழ்ப்பாணத்திலும் விளையாட்டுப்போட்டி ஒன்றில் ஈடுபடலாயிற்று.

## இந்தியாசெல்லும் மாணவர்கள்

இந்தியாவுக்குச்சென்று படிக்கும் மாணவர்களுக்கென அனுப்பப்படும் பணத்தொகையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. பல்வேறுவழிகளாலும் இந்தியாவிற்குச் சென்றுகொண்டிருக்கும் பணத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தாங்கள் இலங்கையில் படிப்பதற்குப் போதியவசதியில்லையென்று மாணவர்கள் நிரூபித்தால்மட்டும் அவர்கள் இந்தியாவுக்குச்சென்று படிப்பதற்குத்தேவைப்படும் பணத்தைப்பெற அனுமதிவழங்கப்படும்.

## போதியவெங்காயம்

இலங்கையிலே இந்தஆண்டில் சுயதேவையைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படும்வெங்காயம் அமோகமாக விளைந்திருக்கிறது. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகியஇடங்களில் வெங்காயம் நன்குவிளைந்துள்ளது. ஆனால், இவ்வாண்டிலே மிளகாய்ப்பயிர் பூச்சிகளால் பாதிக்கப்பட்டு விளைவு குன்றியிருக்கிறது.

## சிங்கப்பூரும் மொழிப்பிரச்சினையும்

சிங்கப்பூர்ச் சட்டசபை அங்கத்தவரும், அங்குபிரசுரமாகும் "மின்ஒளி" என்ற தமிழ்வாரப்பத்திரிகையின் ஆசிரியருமான திரு. எல். இராமசாமிச்செட்டியார் சென்றசனிக்கிழமை கொழும்புக்குவரலாயினர். இலங்கையிலே சரித்திரப்பெருமைவாய்ந்த சிலஇடங்களை அவர் பார்வையிட்டுவருகின்றார். அங்கே இவர்பேசியபோது: சிங்கப்பூரில் ஆங்கில, சீன, மலாய, தமிழ் ஆகியமொழிகள் அரசாங்கமொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன; அதனால், அங்கு மொழிப்பிரச்சினை என்பதேஇல்லை; சனத்தொகையில் 80சதவிகிதத்தினர் சீனர்களாய்இருந்தும் அவர்கள் சிறுபான்மைச் சமூகத்தினராகிய இந்தியர்களைச் சகோதரர்கள்போல நேசித்துவருகிறார்கள் என்று அவர் தெரிவிக்கின்றார்.

## புதிய ஆயுள்வேதஆஸ்பத்திரி

ஒவ்வோர் மாகாணத்திலும் ஒவ்வோர் ஆயுள்வேதஆஸ்பத்திரி அமைக்கும் திட்டத்தின்கீழ் முதலாவது ஆயுள்வேதஆஸ்பத்திரி அனுராதபுரத்தில் திறந்துவைக்கப்படும். பிரதமர்பண்டாரநாயகா இம்மாதம் 14-ந்திகதியன்று இந்தப்புதிய ஆயுள்வேதஆஸ்பத்திரிக்கு அஸ்திபாரக்கல் நாட்டவிருக்கின்றார். பத்துலட்சம்ரூபாசெலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தஆஸ்பத்திரி நூறு நோயாளிகள்தங்கிச் சிகிச்சைபெறக்கூடிய படுக்கைவசதியும், வெளிநோயாளர்கள் மருந்துபெற்றுப் போகும்வசதியும் கொண்டதாயிருக்கும். புதியஅனுராதபுரத்திலே டிஸ்திறிக்கோட்டுக்கு எதிரே இதுஅமைக்கப்படவிருக்கிறது.

## தலைமன்னார் கப்பல்சேவை

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்குமிடையே நடைபெற்றுவரும் கப்பற்போக்குவரத்துச்சேவையை வாரத்திலே மூன்றுநாட்களாகக்குறைக்க இந்தியறெயில்வே அதிகாரிகள் முடிவுசெய்துள்ளார்கள். வருகிறஐப்பசிமாதம் 1-ந்திகதிமுதல் இந்தப்புதியஒழுங்கு நடைமுறைக்குவருமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்குமிடையே வாரத்தில் ஆறுநாளும் கப்பற்போக்குவரத்து நடைபெறுகின்றது. ஐப்பசிமாதம் 1-ந்திகதிக்குப்பிறகு செவ்வாய், வியாழன், சனியாகிய மூன்றுதினங்களிலும்தான் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கும், ஞாயிறு, புதன், வெள்ளியாகிய மூன்றுதினங்களிலும்தான் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கும் கப்பற்போக்குவரத்துச்சேவை நடைபெறும். இலங்கை—இந்தியப் பிரயாணப்போக்குவரத்து வெகுவாகக் குறைந்துவிட்டமையே இந்நடவடிக்கைக்குக் காரணமாகும்.

## இலங்கை எஞ்ஜினியர்கள்

இலங்கையிலே எஞ்ஜினியர்கள் குறைவாயிருக்கும் காரணமாக வெளிநாடுகளிலிருந்து எஞ்ஜினியர்களைத்தருவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவருகிறது; ஆனால், அதேசமயத்தில் இலங்கைஎஞ்ஜினியர்கள் வெளிநாடுகளில் வேலைதேடுகின்றனரென்று இலங்கைச்சர்வகலாசாலை அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்றார். கடந்தமூன்றுவருடங்களிலும் இருபதுபேருக்கு அதிகமான இலங்கை எஞ்ஜினியர்கள் கானா,மலாயா, ஈராய்க், சூடான் ஆகியநாடுகளில் வேலைநாடிச் சென்றுள்ளனர்; அவர்களுக்குச் சம்பளம், மற்றும்வசதிகளெல்லாம் அந்நாடுகளிலே அதிகம்கிடைத்திருக்கின்றன; அதனால், எஞ்ஜினியறிங் பட்டம் பெறும் இலங்கையரை இலங்கையிலேயே வைத்திருக்குமாறு அவர்களுக்குச் சம்பளம்கூட்டிக்கொடுக்க ஏதாவது செய்யப்படவேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

## புதிய சமாதானநீதிபதி

ஊர்காவற்றுறைப் பட்டினசபையின் புதியதலைவர் ஆசிரியர் எஸ். தேவசகாயம்அவர்கள் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள்முன்பாகச் சென்றவெள்ளிக்கிழமை சமாதானநீதிபதியாக விசுவாசப்பிரமாணஞ் செய்திருக்கின்றார்.

## பரந்தன் இரசாயனதொழிற்சாலை

பழுதுற்றிருக்கும் பரந்தன் அரசினர் இரசாயனதொழிற்சாலையைப் பழுதுபார்ப்பதற்கெனச் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த திரு. ஹேசோக்என்ற தொழில்நுட்பநிபுணர்வந்து அதிலே மிகவும் பெறுமதிவாய்ந்த முக்கியயந்திரசாதனமாகிய "கொன்லேட்ட"ரில் ஏற்பட்டுள்ள பழுதுகளைக் கவனிப்பதில் ஈடுபட்டுவருகிறார். அது கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டுத் திருத்தவேலை நடைபெற்றுவருகின்றது. அதனால், இன்னும் சிலவாரங்களில் தொழிற்சாலை இயங்கஆரம்பிக்குமெனத் தெரியவருகிறது.

## பொருளாதார அபிவிருத்திச்சங்கம்

பனைமரங்களைப் பாதுகாத்தல், கால்நடைவளர்ப்பை ஊக்கப்படுத்துதல், கடற்தொழிலை மேம்படச்செய்தல், குடிசைக்கைத்தொழில்களுக்கு ஆக்கமளித்தல் ஆகியபல நல்நோக்கங்களுடன் "நெடுந்தீவுப் பொருளாதார அபிவிருத்திச்சங்கம்" என்றபெயருடன் ஓர்புதியஸ்தாபனம் சமீபத்திலே கொழும்பில் ஆக்கப்பட்டிருக்கிறது. இதனை ஆக்குமுகமாக நடந்தகூட்டத்துக்குத் திரு. கே. குணநாயகம் தலைமைவகித்தார். நெடுந்தீவைச்சேர்ந்த பல பிரமுகர்கள் கூட்டத்தில் சமுகமாயிருந்தார்கள்.

## வீதிகளின் பெயர்ப்பலகைகள்

மட்டக்களப்பிலுள்ள தெருக்களின் பெயர்ப்பலகைகளைத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் எழுதுமாறுகேட்டுத் தலதாபனமந்திரியின் நிரந்தாகாரியதரிசி அனுப்பியகடிதமொன்றை மட்டக்களப்புப் பட்டினசபை பரிசீலனைசெய்தபோது, நாட்டின் ஏனைய பாகங்களிலும் தெருக்களின் பெயர்ப்பலகைகள் மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன என்றுகண்டு பட்டினசபை திருப்தியடையும்வரை அவ்விதம் எழுதுவது சாத்தியமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. தற்போது மட்டக்களப்புப் பட்டினத்திலுள்ள தெருக்களின் பெயர்ப்பலகைகள் ஆங்கிலத்திலும், தமிழிலுமே எழுதப்பட்டுள்ளன.

## திருச்சிலுவைக் கன்னிகாசபை

யாழ்ப்பாணம், திருச்சிலுவைக் கன்னிகாசபையில் சேர்ந்துகொள்ளுமாறு நவகன்னியாஸ்திரிகளாய்இருந்துஆயத்தஞ்செய்துவந்த கரம்பனைச்சேர்ந்த சங். மரியகொறெற்றி, மன்னாரைச் சேர்ந்த சங். டொறோத்தி, மண்டைதீவைச்சேர்ந்த சங். கத்தறின் ஆகிய மூவருக்கும் கன்னிகாஉடைவழங்கும் திருச்சடங்கு சென்ற 7-ந்திகதிதிங்கட்கிழமைபிற்பகல்5மணியளவில் விக்கார்ஜெனறல் மிகவண. எச். லெக்குத்தூர் சுவாமியவர்களால் பத்தியருட்சிக்குரியவிதமாய் நிறைவேறியது. அத்தருணம் பலகுருமாரும், திருச்சிலுவைச்சபைக் கன்னியாஸ்திரிமார்பலரும், புதியகன்னியாஸ்திரிகளின் பெற்றோர் சுற்றத்தாரும் திரளாகச் சமுகமளித்திருந்தார்கள். வண. சற். என். குருஸ்சுவாமியவர்கள் செய்தபிரசங்கத்திலே புதியகன்னியாஸ்திரிமாருக்கு வாழ்த்துக்கூறி அரியபுத்திபோதனைகள் செய்ததும் விக்கார்ஜெனறல் சுவாமியவர்களால் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம்அருளப்பட்டது. ஈற்றில் சிற்றுண்டிஉபசரணை நடைபெற்று வைபவம் இனிதேநிறைவாயிற்று.

## அதிகமான நெல்விளைவு

இலங்கையிலே உள்நாட்டுவிவசாயிகள் இதுவரை 16கோடியே 80லட்சம் ரூபாபெறுமதியான 1கோடியே 50லட்சம் புசல்நெல்லை உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு விற்றிருப்பதாகவும், நாட்டின் பலபாகங்களிலும் இம்முறை நெல்விளைவு மிக நன்றாயிருப்பதாகவும், இந்தவருடம் முடிவதற்குள் அரசாங்கம் இன்னும் மேலதிகமாக நெல்வாங்கவிருப்பதாகவும் உணவுப்பகுதி தெரிவித்திருக்கிறது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகியபகுதிகளில் காலபோக அறுவடை நெல்லை அரசாங்கம் இப்போது வாங்கிக்கொண்டிருக்கிறது.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

சதாசகாயநாயகியின் அருளால் யான் கேட்ட இருவரங்கள் கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

மாதாவின் மைந்தன்.

* * *

பரிசுத்த சதாசகாயமாதாவின் பேருதவியினாலும், (மருதமடுமாதா)வின் உதவியினாலும் 3 மாதகாலமாய் மாறுதவியாதி குணமானது. என்முழு இருதயத்தோடு அவவுக்குத்தோத்திரம்கூறி, எனது நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கக் காலதாமதமானதற்கு மன்னிப்பை இரந்துகொள்ளுகிறேன்.

டனீசியஸ் மாசில்லாமணி

அச்சுவேலி

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரிசுத்தசதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு அப்போஸ்தலர், அர்ச். மரியகொறெற்றி இவர்களிடம் நான் நம்பிக்கை வைத்து, ஆறுவது வருடத்திற்குப்பின் உண்டாகிய கர்ப்பத்திற்கு ஒருவித இடையூறுமின்றி, ஒரு பெண்குழந்தையைப் பெற்றதினாலே, என் முழுஇருதய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும், எனது பிள்ளைகள் நோய்பிணியின்றிச் சரீரசுகத்துடனும், தேவநேசத்தில் வளரும்படியும், எங்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களைத்தரும்படியும் பிரார்த்திக்கின்றேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

முல்லைத்தீவு செ. மரியானுப்பிள்ளை.

* * *

எனது கணவர் பிரான்சிஸ் நவரத்தினம் சுகவீனங் காரணமாக வேலையில் நின்று நிற்பாட்டப்பட்டார். பலநாட் சிகிச்சையின்பின், சுகம்பெற்று வேலைக்குத் திரும்பவிருந்தபோது, அயலாரின் தொந்தரவால் மூளைக்கோளாறுகண்டு, ஊணும் உறக்கமுமின்றி, உயிரையும் இழக்கிற நிலையில் இருந்தார். யானோ குடும்ப பாரத்தாலும், அவர் நிலையாலும் கலங்கியபோது, எம்மீசாமிலிருந்த வண. எவ். குலாஸ் சுவாமியார் இருவாரம்வரை தினமும் இருமுறை வீடுவந்து புத்திமதிகூறி, உணவு உண்ணச் செய்தார். அதன் மேல்வண. எஸ்பீற்றர்சுவாமியார், மயிலிட்டிக் காணிக்கைமாதா கோவிலுக்கு என் நாயகரைக் கூப்பிட்டு ஆசீர்வதித்து வசாவிளான் உத்தரியமாதாகோவிலில் வைத்திருக்கும்படி சொன்னார். அவ்வாறே, இருவாரங்கள் வைத்திருந்து யேசுவின் திரு இருதயம், சதாசகாயமாதா, அர்ச். சவேரியார், அர்ச். அந்தோனியார், அர்ச். சின்னத்தெரேசம்மாள் ஆகியோரில் நம்பிக்கை வைத்து மன்றாடி வந்தோம். ஈற்றில் நல்லூர் அர்ச். சவேரியார் கோவிலில் ஆறுநாட்கள் இருந்து திவ்விய பூசையும் வைப்பித்தோம் கடைசிநாளன்று வண. எச். ஜெஸ்லான்ட்சுவாமியார் எனதுபத்தாவை ஆசீர்வதித்தஅதேவேளை, எனதுகணவரின் மைத்துனர் திரு. சிங்கராசா, மடுப்பதியில் தலைஉருவம் வைத்து மன்றாடிய அதேநேரம் எனது நாயகர் நல்லுணர்ச்சி பெற்று வீடுமீண்டார். நன்றியறிதலாக இதனைப் பத்திரிகைமூலம் வெளியிடுகின்றேன்.

ந. மேரிலில்லி.

வசாவிளான், (மனைவி)

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 10-1959.